www.tamilarangam.net

# சிந்தனை

P'RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE - FRANCE

1992



- தெரிவுக்குழு தீர்வுதருமா ?
- நம்பிக்கையில்லை
- தீர்வை நோக்கி......................
- முற்றுகை (சிறுகதை)
- ருஷ்யாவில் இடதுசாரிகள்
- ஜேர்மனியின் மாற்றம்
- பிரேமதாசா-விஜயவீர ஒப்பந்தம்
- மனநோயாளிகள்
- கட்டிடக்காட்டுக்குள்

2 / 92

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வீர அஞ்சலி

ஆயுத வெறியர்களுக்கு எதிராக
குரல் எழுப்பி
வீரமரணமடைந்த

சேதுபதிப்பிள்ளை
இராஜகுலேந்திரனுக்கு

எமது அஞ்சலிகள்

மனிதாபிமானமுள்ளவர்கள் மனதில்
அவர் நாமம் என்றும் வாழும்



www.tamilarangam.net

# சிந்தனை



ஆரம்பம் 1985

**சுதந்திரமான கருத்துப் பரிமாறல்கள் மூலமே சிந்தனை உருவாகின்றது.**


**2 / 92**

*31/07/1992*

ஆறு இதழ்களுக்கான சந்தா 20 டி.எம்.



தொடர்புகளுக்கு:

**SINTHANAI**
**Haussmannstr.107,**
**7000 STUTTGART 1**
**GERMANY**


எமது மண்ணில், தீர்வு காண முடியாமல், தொடரும் தேசிய இனப்பிரச்சனையை மேலும் சிக்லாக்கியுள்ளது, தமிழ் - முஸ்லீம் மக்களிடையே தீய சக்திகள் உருவாக்கியுள்ள முரண்பாடுகள்.

நூற்றாண்டு காலமாக ஒரே மொழியைப் பேசி ஒன்றுபட்ட சகோதரர்களாக வாழ்ந்த தமிழ், முஸ்லீம் மக்கள் இன்று ஒருவரை ஒருவர் சந்தேகக் கண்களுடன் நோக்கும் நிலமைகளை இந்த தீய சக்திகள் வேண்டுமென்றே உருவாக்கியுள்ளன.

அரசாங்கமும், புலிகள் இயக்கமும், மற்றைய சுயநல சக்திகளும் தமது தேவைகளைப் பூர்த்தி செயது கொள்ள தமிழ் - முஸ்லீம் மக்கள் மத்தியில் நிலவிய ஒற்றுமையைச் சீரழித்துள்ளன. இவர்களின் நடவடிக்கைகளினால் படுகொலை செய்யப்படுவதும், அகதிகளாவதும், அல்லல் படுவதும் சாதாரண முஸ்லீம் மக்களும் தமிழ் மக்களுமேயாகும்.

தமது தமிழ் சகோதரர்களையே கொன்று குவிப்பதில் தயக்கம் காட்டாத புலிகள்,முஸ்லீம் சகோதரர்கள் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த பூமிகளிலிருந்து விரட்டி அகதிகளாக்கி வரலாறு காணாத துரோகத்தை இழைத்துள்ளார்கள். இன்று அப்பாவி முஸ்லீம்களின் கொலைகள் தொடருகின்றன.

தம்மத்தியில் வாழும் ஒரு சகோதர இனத்திற்கு இவ்வகையான துரோகம் இழைப்பவர்களை இன்னும் "சுயநிர்ணய உரிமை" என்ற ஒரு தூய்மையான விடயத்திற்காகப் போராடுகிறார்கள் என்று எவரும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

மறுபுறத்தில் பிரித்தாளும் தந்திரத்தைக் கையாளும் அரசாங்கம் முஸ்லீம் ஊர்காவற்படையினர், மற்றும் கொலைப்படைகளையும் பாவித்து அப்பாவித் தமிழ் மக்களை கடத்தியும், படுகொலை செயதும் தனது பேரினவாத அரசியலை முன்னெடுக்கின்றது.

வடக்கு கிழக்கு மாகாண இணைவு இல்லாத எந்த விதத் தீர்வும் ஏற்றுக் கொள்ள முடியாது எனற தமிழ் அபிப்பிராயம் இருக்கையில், தீர்வுகள் பற்றி தமிழ் முஸ்லீம் குழுக்களுக்குள் கருத்தொற்றுமைகள் ஏற்படும் வேளையில் ......

இவற்றைச் சீர்குலைக்க வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கும், புலிகளுக்கும் ஏற்பட்டுள்ளது.

எந்தவகையான தீர்வுகள் ஏற்படவிருந்தாலும், எந்த வகையிலாவது ஓரளவு சமாதானம் ஏற்படும் சாத்தியக் கூறுகள் இருந்தாலும் - பிரேமதாசாவும் புலிகளும் இணைந்து அவற்றை குலைத்தது சமீபகால வரலாறுகள். அந்த துரோக நடவடிக்கைகள் இருபகுதியினராலும் இன்னும் தொடருகின்றன.

வடக்கு கிழக்கு மாகாண இணைவுக்கு அத்தியாவசியமான தமிழ் - முஸ்லீம் உறவுகளை எப்படியாவது - படுகொலைகள், கடத்தல்கள் மூலமாக - முறியடிக்க வேண்டுமென்பதே புலிகளினதும், அரசாங்கத்தினதும் நோக்கமாக உள்ளது.

தமிழர்களின் பாரம்பரிய பிரதேசத்தை சிறு சிறு துண்டுகளாகப் பிரிப்பது பிரேமதாசாவின் நோக்கம்.

மக்கள் நலனில் எந்த வித அக்கறையுமில்லாத மாபியாப் புலிகளுக்கு அவசியம் தொடர்ச்சியான போர். வடக்கு கிழக்கு இணைவைச் சாத்தியமில்லாமல் செய்தால், வடக்கு கிழக்கு இணைவுக்காகப் போராடுகிறோம் என்று முடிவில்லாத கொலைகளைத் தொடரலாம். தலைவர்வர்கள் தங்களது தோல்களைக் காப்பாற்றிக் கொள்வார்கள். மக்கள் அழிவு தொடரும்.

சாதாரண தமிழ் மக்கள் என்ன நினைக்கின்றார்கள் என்பதை கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற இரு நிகழ்வுகள் தெளிவாக வெளிக்காட்டின.

அண்மையில் பொத்துவில் கோமாரி பகுதியில் பஸ்ஸில் பிரயாணம் செய்த முஸ்லீம், சிங்கள பிரயாணிகளை புலிகள் இயக்கத்தினர் சுட்டுக் கொலை செய்த பொழுது அதே பஸ்ஸில் பிரயாணம் செய்த ராஜகுலேந்திரன் தான் உயிர் தப்புவதற்கு சந்தர்ப்பம் இருந்தும் கூட கொலைகளுக்கு எதிராக குரல் எழுப்பி தன் உயிரை நீத்தார்.

கடந்த ஜுன் மாதம் கொழும்பிலிருந்து மட்டக்களப்பை நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயிலில் முஸ்லீம்களும் பிரயாணம் செய்தனர். ஆயுதம் தாங்கிய புலிகள் இயக்கத்தினர் அந்த முஸ்லீம் பயணிகளை இறக்க முற்பட்ட பொழுது அதே ரயிலில் பிரயாணம் செய்த சக தமிழ் பிரயாணிகள் துணிச்சலுடன் செயலபட்டு அந்தக் கடத்தல் முயற்சியை முறியடித்தனர்.

இந்த மக்களின் குரல்கள்தான் சாதாரண தமிழ் மக்களின் மனச்சாட்சியின் குரலாகும். இந்தக் குரல்களுக்கு மதிப்பளிக்கக் கூடியவர்களினால்தான் மக்களுக்கு நன்மை தரும் தீர்வுகளைக் காணமுடியும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாட்டுநடப்பு

## பாதயாத்திரை

பிரேமதாச அரசாங்கத்திற்கெதிராக சமீப காலத்தில் எடுக்கப்பட்ட வெகுஜன நடவடிக்கை என்ற முறையில் எதிரணிக் கட்சிகளினால் நடத்தப்பட்ட பாதயாத்திரை ஒரு முக்கியமான நிகழ்வாகும். மார்ச் 16ம் திகதி கொழும்பிலிருந்து ஆரம்பமாகிய இந்த எதிர்ப்பு யாத்திரையில் ஆரம்பத்தில் 5000 பேர் கலந்து கொண்டனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, நவசமாஜக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவை இதில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டன. அரசாங்கத்தின் தனியார் மயமாக்கும் நடவடிக்கைகளை, உயரும் வாழ்க்கைச் செலவு, தொடரும் யுத்தம் ஆகியவற்றை எதிர்க்கும் சுலோக அட்டைகளுடன் காணாமற் போனவர்கள் காலவரையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு நீதி கோரியும் மக்கள் ஊர்வலத்தில் சென்றனர்.

பாதயாத்திரை ஆரம்பித்த அன்று கொழும்பிலுள்ள மதில்கள் மேல் எல்லாம் புலிகளின் ஒரு சதித் திட்டமென்ற" சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. ஆனால் அரசங்கத்தின் இந்த நடவடிக்கை ஊர்வலத்தில் பங்கு கொண்டவர்கள் மீதோ அல்லது பொதுமக்கள் மீதோ எந்த வித தாக்கத்ததையும் ஏற்படுத்தவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள "ஹெல உருமைய" இனவாதிகளின் சத்தமும் பலமாகக் கேட்கவில்லை.

ஏப்ரல் முதலாம் திகதி பாதயாத்திரை கதிர்காமத்தையடைந்தது. இருநூறு மைல் யாத்திரையில் பல வரவேற்புக்களும் பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன. திசமாகாரமவில் இருந்து கதிர்காமமம் வரையான ஊர்வலத்தில் சுமார் 10,000 பேர் கலந்து கொண்டனர்.

பதினெட்டு நாள் ஊர்வலத்தில் காணாமற்போனவர்களின் குடும்ப அங்கத்தவர்களே பெரும் பங்கை எடுத்துக் கொண்டனர் என்று கூறலாம். வெள்ளையாடை அணிந்த பெண்கள் காணமற் போன தமது கணவன்மார் அல்லது பிள்ளைகளின் படங்களைக் கொண்டு சென்றனர். இறுதி நாள் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் 25,000க்கும் மேலான மக்கள் கலந்து கொண்டனர். கொலை வெறி கொண்ட அரசாங்கத்தை எதிர்த்து மக்கள் நடாத்திய எதிர்ப்பு என்ற வகையில் இது ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வாகும்.

தும்மினால் துணுக்காய் முகாம், "தூ"என்றால் துப்பாக்கிச்சூடு என்ற நிலமையிலிருக்கும் யாழ்ப்பாணத்தில் இவையெல்லாம் எண்ணிப்பார்கக முடியுமா?

அடக்கு முறைகளுக்கெதிரான வருங்கால நிகழ்வுகள் எங்கு ஆரம்பிக்க முடியும் என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும்.

## கொலைகாரர் குழுக்குள் குத்து வெட்டு.....

முன்னை நாள் பிரதி பொலிஸ் மாஅதிபர் பிரேமதாச உடுகம்பொல சில சத்தியக் கடுதாசிகள் வெளிக் கொண்டுவந்த தகவல்கள் அரசாங்கத்தின் உண்மை சொருபத்தை ( அது முன்பு தெரியாததல்ல ) பகிரங்கப்படுத்தியது. அரசாங்கத்தின் ஜே.வி.பி.யினரை ஒடுக்கும் வேலைகளில் "கடுமையாக" உழைத்த உடுகம்பொல, வேண்டிய வேலைகள் முடிந்த பின்பு வேண்டாதவராகிவிட்டார் பெரியவர் பிரேமதாசாவுக்கு! இதன் விளைவாக அவர் கட்டாய லீவில் அனுப்பப்பட்டு பதவியும் பறிக்கப்பட்டது.

தான் கட்டாய லீவில் அனுப்பப்பட்டதற்கான காரணம், தான் போதைவஸ்துக் கடத்தல்காரர்கள், விபசார விடுதிகள், சூதாட்டக்கிளப்புகள் ஆகியவற்றின் மீது எடுத்த நடவடிக்கைகளே காரணமென உடுகம்பொல கூறியுள்ளார். சாது, சாது என்று கோவில் கோவிலாகத்திரியும் ஜனாதிபதி இந்த நடவடிக்கைகள் தன்னுடைய கட்சிகார்களையும் ஆதரவாளர்களையும் பாதிப்பதால் உடன் நிறுத்துமாறு கூறியிருந்தாராம்! இந்த முற்றுகை சம்பந்தமான கோப்புக்கள் யாவும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினாவிடமே இருந்தனவாம். அவரின் படுகொலைக்குப்பின் அவை மாயமாக மறைந்துவிட்டனவாம். ரஞ்சன் விஜயரத்தனாவின் படுகொலைபற்றிய விசாரணைகளை ஜனாதிபதியே தட்டிக்கழித்துவிட்டாராம்.

மறுபுறத்தில் 1989 ஜனாதிபதித் தேர்தலின் கள்ள வாக்குகளினாலேயே பிரேமதாசா வென்றார் என்ற தரவுகளையும் இவர் வெளிக் கொண்டுவந்தார்.

தெற்கிலும் நடைபெற்ற பல எதிர்க்கட்சியினரின் கொலைக்கு அரசாங்கக் கட்சியினரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கிய கறுப்புப்பூனைகள்,


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பச்சைப்புலிகள் ஆகியவையே காரணமெனவும் விளக்கினார்.

இன்றைய அரசாங்கத்தை உண்மையாக ஆட்டிப்படைப்பவர்கள் கடத்தல்காரர்கள், போதைவஸ்து வியாபாரிகள் இப்படியான சமூகவிரோதிகள்தான். இவர்களின் பிணக்கால் இந்தச் செய்திகள் வெளியில் வந்து கொண்டிருக்க, தம்பி பிரபாகரன் மலையாளம் பத்திரிகையோடு ஏதோ பறைஞ்சது.!

மலையாளப் பத்திரிகையான மாத்துருபூமி நிருபருக்கு அளித்த பேட்டியில் ரஞ்சன் விஜயரத்னாவைக் கொண்டது கறுப்புப்பூனைகள் தான் என்று கதை சொல்லியிருக்கிறார். தம்பி சொல்வதில் உண்மையும் இருக்ககலாம், ஏனென்றால் அண்ணன் பிரேமதாசாவுக்கும் தம்பியும் ( யார் செத்தாலும் ) நல்ல ஒட்டு. ஒரு உதாரணத்தை தம்பியே சொல்லியிருக்கிறார், மாத்துருபூமி நிருபருக்கு!

பிரேமதாச அண்ணனுடன் தம்பியும் இணைந்து இந்திய ராணுவத்தை எதிர்த்து போராடிய காலம். அண்ணன் பிரேமதாசா தம்பிக்கு, உன்றை ஆட்களை எல்லாம் கொல்லு ( இந்த கொலைகளுக்கு கண்ணீர் வடிக்கக் கூடாது என்டு சிலர் சொல்லுவினம் - அது வேறு.) ஆயுதங்கள் கொடுத்தார். அந்த ஆயுதங்களை கொடுத்த அதிகாரி சில ஆயுதங்களைக் தம்பிக்கு கொடுக்கவில்லையாம். தம்பி உடன் அண்ணனுக்கு அறிவித்தார். அன்று இரவே அந்த அதிகாரி கொலை செய்யப்பட்டார் என தம்பி பிரபாகரன் தன்னுடைய பாணியில் கூறியுள்ளார். அண்ணனுக்கும் தம்பிக்கும் எவ்வளவு ஒற்றுமை. இப்படி ஒட்டி இருந்தவருக்கு யாரை யாரைக் கொண்டு பிரேமதாசா கொலை செய்தார் என்பது தெரியாமலா போகும். கொலைகாரருக்கை கொத்து வெட்டு வந்ததால் எல்லாம் வெளியில் வருகுது!

## அப்பாவிகளின் படுகொலைகள்.

கடந்த 28.04.92 அன்று,வேறு ஒரு 'இனத்தைச்' சேர்ந்திருந்தார்கள் என்பதைத் தவிரவேறெந்த வித்தியாசத்தையும் கொண்டிராத ஒரு மக்கள் குழுவினர் மீது ஆயுதங்களால் மாத்திரம் தமது இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த முயலும் ஒரு கும்பல் கொலை வெறித் தாக்குதல் நடத்தியது நள்ளிரவில், இடம், பொலநறுவை மாவட்டத்திலுள்ள வெலிக்கந்தைக்கு அருகிலுள்ள அழிஞ்சிபத்தன என்கின்ற சுமார் 400பேர் வசிக்கும் சிறுகிராமம்.

கிழக்குக் கரையோரமாக அடர்ந்த காட்டின் மத்தியில் அமைந்துள்ள இந்தக் கிராமத்தில் பெரும்பாலானவர்கள் முஸ்லிம்கள் ஆவர்.

நள்ளிரவில் நிகழ்த்தப்பட்ட இந்தப் பெருந்தாக்குதலில் 54பேர் கொல்லப்பட்டுள்ளனர், படுகாயமுற்றோர் தொகை17. உயிர்தப்பியோர் காடுகளிற்குள் ஒளிந்து கொண்டனர்.

இந்தப் படுகொலைகளை நிகழ்த்தியது புலிகள் தான் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொல்லப்பட்டோரின் தலைகள் துண்டிக்கப்பட்டதாகவும் இறந்த உடல்களும் வீடுகளும் தீயிட்டுக் கொழுத்தப்பட்டுவிட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நிராயுதபாணி அப்பாவி மக்கள் மேல் ஆயுதம் வைத்திருக்கும் இனவெறியர்கள் நடாத்தும் முதுகெலும்பற்ற கொலைகள் இவை.

நள்ளிரவு 1 மணியளவில் இந்தக்கிராமத்திற்குள் பிரவேசித்த இந்த இனவெறிக்கும்பல் 4 மணிவரை படுகொலைகளை நடத்தியுள்ளனர். துப்பாக்கிகள், கத்திகள் என்பன அப்பாவிமக்கள் மீதான இந்தப்படுகொலையின் போது பாவிக்கப்பட்டுள்ளன. சிறுகுழந்தைகள் தரையில் அறைந்து கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப்படுகொலைகள் நடைபெறுவதற்கு முன் இந்தக் கிராமத்திலுள்ள பொலிஸ்நிலையம் புலிகளினால் தாக்கப்பட்டிருப்பதும் புலிகளின் முஸ்லிம் மக்கள் பற்றிய நிலைப்பாடு மற்றும் அணுகுமுறைகளும் கடந்தகால சம்பவங்களும்(காத்தான்குடி கதைகள் மறக்கமுடியாதவை) இதுவும் புலிகளின் நரவேட்டைகளில் ஒன்றென ஊர்ஜிதப்படுத்துகின்றன.

கொல்லப்பட்டவர்களில் பெரும்பான்மையினர் பெண்களும் பச்சிளங்குழந்தைகளும் ஆவர்.

சுமார் 500 கொலைஞர்கள் இப்படுகொலை நிகழ்த்தியிருக்கிறார்கள்.

இந்தப்படுகொலைகள் நிகழ்ந்து முடிந்தபின் கரபொல, முத்துகல ஆகிய தமிழ்மக்கள் வாழும் கிராமங்களில் முஸ்லிம் ஊர்காவல் படையினர் கொலைவெறித்தாக்குதல் நடாத்தியபோது அங்கும் கொல்லப்பட்டது

www.tamilarangam.net

வேறுயாருமில்லை அப்பாவிமக்கள் தான்.

54 அப்பாவிமக்கள் இந்த அநீதியாளர்களின் இனவெறிக்குப் பலியாகியுள்ளனர். 57பேர் காயமடைந்துள்ளனர்.

இவைதவிர

பல பெண்கள் இந்த மிருகங்களினால் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்பட்டனர். இளம்பெண்கள் பலரைக் காணவில்லை.

இங்கும் துப்பாக்கிகள், வாள், கத்திகள் இரும்புக்கம்பி போன்றவற்றுடன் நிராயுதபாணி மக்களுடன் இந்தக் கோழைகள் போர் புரிந்துள்ளனர்.

139 குடும்பங்கள் வாழ்ந்த முத்துகலவில் காலை ஐந்தரை மணியிலிருந்து ஏழரை மணிவரை ஊர்காவல்படையினர் கொள்ளையில் ஈடுப்பட்டபின் ஒன்பதரை மணிவரை கரபொல கிராமத்தில் தமது அழிவுகளை தொடர்ந்தனர்.

முத்துகலை கிராமத்திலுள்ள 48 வீடுகளும் அம்மன், பிள்ளையார் கோவில்களும் எரிக்கப்பட்டுள்ளன. 6பேர் காணமல் போய்விட்டனர்.

பத்துப்பேர் கொண்ட குடும்பத்தில் பத்து வயது சிறுவன் தவிர அனைவரும் வீட்டிற்குள் வைத்துக் கொழுத்தப்பட்டுள்ளனர்.

வீடுவீடாகப் புகுந்து வெட்டிக் கொலை செய்ததுடன் சிலர் பொலிசாராலும் ஊர்காவல் படையினராலும் பிடித்து வைத்துச் சித்திரவதை செய்யப்பட்டனர்.

ஆயுத வியாபரிகளின் இலாபங்களுக்ககாக அரசாங்கமும் புலிகளும் நடாத்தும் போராட்டச் சதுரங்கத்தில் பகடைக்காய்களாக மாண்டு போவது மக்கள்தான்.

மறுபுறத்தில் அரசாங்கத்தின் செல்வாக்கை அதிகரிக்க புலிகளும், புலிகளின் பிரசாரத்தை வலுப்படுத்த அரசாங்கமும் மாறிமாறி படுகொலைகளை நிகழ்த்திக் கொண்டே இருக்கின்றனர்.

இன்னுமொரு புறத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைய வேண்டுமென்ற தமிழ் மக்களின் உறுதியான கோரிக்கைக்கு முஸ்லீம் மக்களின் ஆதரவையும் பெறவேண்டிய காலகட்டத்தில் இந்த மிருக இயக்கத்தினர் அது ஏற்படாமல் தடுப்பதற்கு சகல பிரயத்தனங்களையும் செய்கின்றனர். கிழக்கு மாகாணத்தில் தொடரும் முஸ்லீம் படு கொலைகள் புலிகள் எவ்வாறு பிரேமதாசாவின் ( அத்தோடு மோசாட் கும்பலின் ) கையாட்களாகச் செயல் படுகிறார்கள் என்பதையே தெளிவாகக் காட்டுகின்றது.

முஸ்லீம் மக்களையும் தமிழ் மக்களையும் படுகொலைகளால் பிரித்து விட்டு வடக்கும் கிழக்கும் இணையமுடியாது என்று சொல்வதே பிரேமதாசாவின் நோக்கமென்றால், படுகொலைகளால் முஸ்லீம் மக்களை தூர விரட்டிவிட்டு வடக்கு கிழ்க்கு இணையவில்லையே என்று ஒரு முடிவில்லாத ( தங்கள் தோல்களைப் பாதிக்காத ) யுத்தத்தை நடத்துவதே புலிகளினதும் ( அவர்களின் ஆயுதவியாபாரிகளினதும் ) நோக்கமாகும். ஆனால் மக்கள் இவற்றை வெகு சீக்கிரத்தில் உணருவார்கள்.

## தியாகி ராஜகுலேந்திரன்.

புலிகளின் வெறித்தனங்களுக்கெதிராக கிழக்கு மாகணத்தில் தமிழ் மக்களின் நடவடிக்கைகள் நம்பிக்கையூட்டுவனவாகவே இருக்கின்றன.

அண்மையில் பொத்துவில் கோமாரி பகுதியில் பஸ்ஸில் பிரயாணம் செய்த முஸ்லீம், சிங்கள் பிரயாணிகளை புலிகள் இயக்கத்தினர் சுட்டுக் கொலை செய்த பொழுது அதே பஸ்ஸில் பிரயாணம் செய்த நற்பிட்டிமுனை நகரசபையின் முன்நாள் தலைவர் சேதுபதிப்பிள்ளை யின் மகன் ராஜகுலேந்திரன் தான் உயிர் தப்புவதற்கு சந்தர்ப்பம் இருந்தும் கூட கொலைகளுக்கு எதிராக குரல் எழுப்பி தன் உயிரை நீத்தார்.

ஆயுதபாணிகளாக பஸ்சுக்குள் நுளைந்த புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், யாராவது தமிழர்கள் இருந்தால் தப்பியோடுங்கள் என்று கூறினார்களாம். அப்பொழுது ராஜகுலேந்திரன் "நான் ஒரு தமிழன், ஆனால் என்னைக் கொலைசெய்த பின்புதான் மற்றவர்களை நீங்கள் கொல்லலாம்" என்று கூறினார். அந்த மிருகங்கள் ராஜகுலேந்திரனை வெளியில் இழுத்து சுட்டுக் கொன்றனராம். அதன் பின் அந்த மனித மிருகங்கள் பஸ்சிலுள் முஸ்லீம், சிங்களப் பிரயாணிகளை சுட்டுக் கொன்றனர்.

18.06.1992 அன்று கொழும்பிலிருந்து மட்டக்களப்பை நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயிலில் முஸ்லீம்களும் பிரயாணம் செயதனர்.

ஆயுதம் தாங்கிய புலிகள் இயக்கத்தினர் அந்த முஸ்லீம் பயணிகளை இறக்க முற்பட்ட பொழுது அதே ரயிலில் பிரயாணம் செய்த தமிழ் சக தமிழ் பிரயாணிகள் துணிச்சலுடன் செயல்பட்டு அந்தக் கடத்தல் முயற்சியை

www.tamilarangam.net

முறியடித்தனர்.

இந்த மக்கள் நடவடிக்கைகள் தமிழ் மக்களின் இருள் சூழ்ந்த வரலாற்றில் தென்படும் ஒளிக் கீறல்களாகவே அமைகின்றன.

## புலி இயக்கத்திற்கு இந்தியாவில் தடை.

தங்களுக்குத்தான் மாற்று இயக்கங்களுக்கும் வெகுஜன அமைப்புக்களுக்கும் தடை விதிக்க முடியுமென்று எண்ணியிருந்த புலிகளுக்கு இது ஒரு கசப்பான விடயம்தான்.

புலிகள் மீதான தடை தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையைப் பாதிக்குமா என்று சில பத்திரிகைகள் கவலைப்பட்டதுதான் வேடிக்கையாக இருந்தது. புலிகள் தமிழ் மக்களுக்காக போராடுகிறார்கள் என்ற கனவில் இருக்கிறார்கள்!

மறுபுறத்தில் புலி இயக்கத்தைத் தடை செய்வதன் மூலமோ அல்லது இலங்கை அரசுடன் அல்லது இந்திய அரசுடன் சேர்ந்து அவர்களை அழித்து விடலாம் என்று மனப்பால் குடிப்பதோ அரசியல் அறிவீனமாகும். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை பேணாத அரசாங்கங்கள் இருக்கும் மட்டும் புலி போன்ற இயக்கங்களும் வளர்ந்து கொண்டுதான் இருக்கும்.

விடுதலைப் புலிகளை இந்திய அரசு தடை செய்ததைத் தொடர்ந்து பல தமிழ்க் கட்சிகள் அறிக்கைகள் விட்டிருந்தன. பொதுவாக இந்த அறிக்கைகள் இந்தத் தடையை வரவேற்பதாகவே இருந்தன. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, இந்தத் தடை இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளைப் பாதிக்காதவகையில் அமுல் நடத்தப்பட வேண்டுமெனக் கூறியுள்ளது! ஆனால் இலங்கை அகதிகளைத் திருப்பியனுப்பும் நடவடிக்கைகள் தொடருகின்றன!!

நவசமசமாஜக்கட்சி விடுத்த அறிக்கை வருமாறு "புலிகள் மீது இந்திய அரசாங்கம் மேற் கொண்டுள்ள நகைப்புக்கிடமான தடையை நாம் கண்டிக்கின்றோம். இது நகைப்புகிடமானது. ஏனென்றால், இந்திய முதலாளித்துவ வர்க்கம்தான் உள்நாட்டுப் பிரச்சனையை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதன் மூலம் இலங்கை ஆட்சியாளர்கள் மீது மேலாதிக்கத்தைப் பேண கருவிகளாக புலிகளை வளர்த்தனர் என்பது அனைவரும் அறிந்ததே. இப்போது அந்தத் திட்டம் பலிக்காததாலும், புலிகளை தமது விருப்பத்திற்கு பயன்படுத்த முடியாதென்பதாலுமே இத் தடை கொண்டு வரப்படுகிறது. மறுபுறத்தில், தேசியப் பிரச்சனையில் அதனை தீர்க்க முடியாமல், தவறான போக்கில் செல்கின்ற இலங்கை அரசாங்கத்தையும் நாம் கண்டிக்கின்றோம்.

பிரச்சினையை அரசியல் ரீதியாக தீர்க்க முடியாத அரசின் தன்மையும் தமிழ் தேசிய இயக்கத்தின் மீதான இராணுவ ரீதியான ஒடுக்கு முறையுமே புலிகளின் பாசிச அணுகு முறைக்கு காரணமாகும்.

தடைகள் மூலமாக புலிகளை வெற்றி கொள்ள முடியாது. ஆனால், அதன் மூலம் அவர்களை வீரர்களாக்கி வைத்திருக்க மட்டுமே முடியும். புலிகளைத் தோற்கடிக்க வேண்டுமானால், தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் அவர்களுக்கு இயலுமான அளவு அதிகாரங்களை வழங்குவதன் மூலம் தேசியப் பிரச்சினைக்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வொன்று காணப்பட வேண்டும்."

## மன்னிப்பு கோருகின்றோம்

தவிர்க்க முடியாத காரணங்களினால்

சிந்தனை

மிகத்தாமதமாகவே வெளிவருகின்றது.
இத்தாமதத்திற்கு
வாசகர்களிடமிருந்து மன்னிப்புக்
கோருகின்றோம்.

ஆசிரியர் குழு

www.tamilarangam.net

# தெரிவுக்குழு தீர்வுதருமா ?

– ராஜன்

**இலங்கையில் தொடரும் யுத்த நிலமைகளில் , தேசிய இனப்பிரச்சனைக்கு ஒரு அரசியல் தீர்வு காணும் முயற்சிகளும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இந்த முயற்சிகளின் சமீப கால நடவடிக்கையே , சகலரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தீர்வை முன்வைக்க முயற்சிக்கும், பாராளுமன்றத் தெரிவுக் குழுவாகும்.** இப்படியான் ஒரு பாராளுமன்றத் தெரிவுக் குழு உருவாக்கப்பட வேண்டுமென்ற பிரேரணையை பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியே கொண்டு வந்ததும், அதை அரசாங்கக் கட்சி அங்கத்தவர்கள் ஏற்றுக் கொண்டு நிறைவேற்றியதும் நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகளாகவே இருந்தன. அந்தத் தெரிவுக்குழுவுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மங்கள முனசிங்க அதற்குத் தலைமை தாங்கியதும் பொருத்த மானதாகவே இருந்தது. ஆனால் ஒரு வருடம் பூர்த்தியடையும் தருவாயில் , தெரிவுக்குழுவின் செயற்பாடுகளும், மற்றைய அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளும் அன்று ஏற்பட்ட நம்பிக்கைகள் எல்லாவற்றையும் சிதற டிப்பவைகளாகவே இருக்கின்றன.

## பிரதான கட்சிகள்

தெரிவுக்குழு எடுக்கும் தீர்மானங்களை நடைமுறைப் படுத்த வேண்டிய அரசாங்கக் கட்சியும், அதற்கு உதவ வேண்டிய பிரதான எதிர்க் கட்சியும் இது வரை எந்த விதமான யோசனைகளையும் தெரிவுக் குழுவிற்குச் சமர்ப்பிக்கவில்லை. இந்த இரு கட்சிகளும் தேசிய இனப் பிரச்சனையை தமது அரசியல் சந்தர்ப்பவாதத்திற்கு துணையாகப் பாவிப்பது மட்டுமல்லாமல் இவை உண்மையான ஒரு தீர்வுக்கு சம்மதமற்ற கட்சிகள் என்பதையே இது தெளிவாகக் காட்டுகின்றது.

மறுபுறத்தில் தெரிவுக்குழுவிற்கு தமிழீழ விடுதலைப்புலிகளும் தமது தீர்வினை முன் வைப்பார்கள் என்ற நம்பிக்கையும் பலரிடமிருந்தது. இது சம்பந்தமாக தெரிவுக்குழு யாழ்ப்பாணம் செல்லலாம் அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் கொழும்பு செல்லலாம் என்ற நம்பிக்கைகள் இருந்தன. ஆனால் இதில் எதுவும் கைகூடவில்லை.

இந்தக் கால இடை வெளியில் யாழ்நகருக்குப் பல தூதுக்குழுக்கள் சென்றும் திரும்பின. கிறிஸ்தவ பாதிரிமார்கள், புத்த பிக்குகள் எல்லோருடனும் பேசிய தமிழீழ விடுதலைப் புலிகள் பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கு தாம் எத்தகைய தீர்வினை முன் வைக்க இருக்கிறார்கள் என்பதனை வெளியிடவில்லை. அவர்களின் பேச்சு வார்த்தைகளில் இந்த விடயம் சேர்க்கப்படாமலும் இருந்திருக்கலாம் !

இந்த மூன்று முக்கிய பிரிவினரும் தமது ஆலோசனைகளை பாராளுமன்ற தெரிவுக்குழுவிற்கு முன் வைக்காத நிலையில் , இந்தக் குழு உபயோகமாக எதையும் சாதிக்க முடியுமா என்ற சந்தேகங்கள் எழுந்துள்ளன. ஆனால் தெரிவுக்குழுவின் தலைவர் மங்கள முனசிங்க பிரதான கட்சிகள் அவ்வாறு ஆலோசனைகளை வைக்காவிட்டாலும் தெரிவுக்குழு ஒரு தீர்மானத்தை எடுப்பதில் எந்த விதமான தடையும் இருக்காது என அறிவித்துள்ளார்.

## மற்றைய கட்சிகள்

இவை தவிர்ந்த மற்றைய கட்சிகளும், குழுக்களும் தமது ஆலோசனைகளை தெரிவுக் குழுவிற்கு சமர்ப்பித்துள்ளன. இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் தொண்டமான் தெரிவுக்குழுவிற்குச் சமர்ப்பித் ஆலோசனைகள் பகிரங்கப்படுத்தப்பட்டு பல விவாதங்களையும் உருவாகியிருந்தன. இந்த ஆலோசனைகளில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் ஏற்படுத்தப்பட்ட அதிகாரப் பரவலாக்கல்களிலும் பார்க்க அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப் பட்டதாகப் புகழப்பட்டது. இந்த யோசனைகளின் அடிப்படையில் தொண்டமான் வடக்குக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தலாம் என்ற நம்பிக்கைகளும் ஏற்பட்டன. விடுதலைப் புலிகளும் தொண்டமானுடன் பேச்சு வார்த்தைகள் நடத்த ஆவலாக இருப்பதாகவும், அவரை வரவேற்கத் தயாராக இருப்பதாகவும் அறிவித்தனர். ஆனால் தென்னிலங்கையில் புத்த பிக்குகளினாலும் மற்றைய பேரினவாத சக்திகளினாலும் எழுப்பப்பட்ட எதிர்ப்புக்கள் இதைச் சாத்தியமற்றதாகச் செய்தன. எனினும்

தொண்டமானின் ஆலோசனைகள் தெரிவுக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

விடுதலைப்புலிகள் தவிர்ந்த மற்றைய தமிழ், முஸ்லீம் குழுக்கள் தமது ஆலோசனைகளை தெரிவுக்குழுவிற்குச் சமர்ப்பித்ததுடன் தம்மிடையேயும் உடன்பாட்டுக்குந்துள்ளன. கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளினாலும், அரச படைகள், முஸ்லீம் ஊர்காவற்படையினர் ஆகியோரினால் தமிழ், மஸ்லீம் மக்கள் படுகொலை செய்யப்படும் சமயத்திலும் தமிழ், முஸ்லீம் கட்சிகள் தம்மிடையே ஒற்றுமையைப் பேணுவது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

## நாலு அம்ச திட்டம்

இந்த நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக தமிழ்க் குழுக்கள் நான்கு அம்சத் திட்டமொன்றை உருவாக்கி அதன் அடிப்படையில் பேச்சு வார்த்தைகளை நடத்துகின்றனர். இந்த நானகு அமசத் திட்டத்திற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமானும், நவசமசமாஜக் கட்சியினரும் ஆதரவு தெரிவித்துள்ளனர். தமிழ் குழுக்களின் ஏகோபித்த உடன்பாட்டையும், தொண்டமான், மற்றும் இடதுசாரிகளின் ஆதரவைப் பெற்றிருக்கும் இந்த நான்கு அம்சத்திட்டம் பற்றி ஐக்கிய தேசியக் கட்சியினரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும் இது வரை தீர்க்கமான அபிப்பிராயங்களை வெளியிடாமலே இருக்கின்றனர்.

www.tamilarangam.net

## வடக்கு கிழக்கு இணைப்பு

தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வு, அதிகாரப்பரவலாக்கல் ஆகியவற்றில் பிரச்சனைக்குரிய விடயமாகக் கருதப்படுவது "வடக்கு - கிழக்கு இணைப்பு" என்ற விடயமாகும். தமிழ் குழுக்களைப் பொறுத்த மட்டில் வடக்குக் கிழக்கு இணைவு அற்ற எந்த ஒரு தீர்வையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்பதைத் தெளிவாகக் கூறியுள்ளனர். ஆனால் சிங்களப் பேரினவாதக் கட்சிகள் வடக்குக் கிழக்கு இணைவை எதிர்க்கின்றனர். தெரிவுக்குழு ஒரு ஏகோபித்த தீர்மானத்தை எடுப்பதில் இந்த அபிப்பிராய பேதங்கள் ஒரு முக்கிய முட்டுக் கடடையாக இருக்கும். இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணங்கள் கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக இணைந்திருக்கின்றன. இந்த அரசாங்கமும் புலிகளும் இணைந்து வடகிழக்கு மாகாணசபையைக் கலைத்த போதும் அதன் நிர்வாகம் வடகிழக்கு இணைந்த நிர்வாகமாகவே பெயரளவிலாவது இருக்கின்றது. இது எவ்வாறு சிங்கள மக்களைப் பாதிக்கும் என்பதுதான் புரியாது இருக்கினறது. தமிழ் மக்களின் உரிமைகளின் விடயத்தில் தமது பேரினவாதக் கொள்கைகளைத் தீவிரமாகக் கடைப்பிடிக்கும் இக் கட்சிகள் வடக்கு கிழக்கு இணைப்பை எதிர்பபில் தீவிரமாகவே உள்ளன.

இந்த நிலமைகளில் பாருளுமன்றத் தெரிவுக்குழு சகல பகுதியினரையும் திருப்திப்படுத்தக்டிய முறையில் தீர்வு ஒன்றை முன்வைப்பது கடினமாகவே உள்ளது. பாராளுமன்றத் தெரிவுக்குழுவும் கடந்த கால வட்டமேசை மாநாடு, சர்வகட்சி மாநாடு போன்று அர்த்த மற்ற ஒரு நாடகமாகப் போய்விடுமோ என்ற சந்தேகமும் பலர் மனதில் தோன்றியுள்ளது.

அட்டைப்படம் நன்றி:

சாம

## நம்பிக்கையில்லை ☞



பிரேமதாசாவின் அரசாங்கத்தைப் பதவி துறக்கக் கோரும் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று பாராளுமன்ற எதிர்க் கட்சிகளினால் கொண்டுவரப்படவிருக்கின்றது. அந்தப்பிரேரணையில் அரசாங்கம் பதவிதுறக்க வேண்டியதற்கான காரணங்களை கீழ் வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது;

"கொலைகாரப் படைக் குழுவொன்றின் மூலம் அரசாங்கத்திற்கு எதிரான அரசியற்கட்சிகளின் ஆதரவாளர்களான ஆயிரத்திற்கு மேற்பட்ட பிரஜைகள் கொலை செய்யப்படுவதற்கு தூண்டுதலாக இருந்துள்ளதனாலும்,

தமது சிந்தனைப் போக்கிற்கு எதிரான சகல சமூகங்களையும் சார்ந்த குடிமக்களான ஆண்களையும், பெண்களையும், குழந்தைகளையும் கொலை செய்துள்ளதும், தமிழீழ விடுதலைப் புலிகள் என்றழைக்கப்படுவதுமான பயங்கரவாத அமைப்பிற்கு ஆயுதங்களையும், சிமெந்தினையும், இராணுவ சாதனங்களையும் ஏனைய சாதனங்களையும், நிதியையும் வழங்கியுள்ளதாலும், அரசாங்க அலுவலர்கள் இலஞ்சம் பெறுவதைப் பொறுத்துக் கொண்டுள்ளதாலும், ஜனநாயக நடைமுறையை அழித்துவிடும் நோக்குடன் தேர்தல்களின் போது அரசாங்கத்திற்கு எதிரான அரசியல் எதிராளிகளைக் கொலை செய்தல், கடத்துதல், அச்சுறுத்துதல், வாக்காளர் அட்டைகளைக் கொள்ளையடித்தல், ஆள்மாறாட்டம் செய்தல், வாக்களிப்பு நிலயங்களுக்குள் ஆயுதங்கள் கொண்டு தாக்குதல், வாக்குப்பெட்டிகளைக் கொள்ளையடித்தல், அவற்றை அடைத்து நிரப்புதல் போன்ற குற்றங்களையும் ஏனைய குற்றங்களையும் செய்வதற்கு தூண்டுதலாகவும், உடந்தையாகவும் அத்துடன் அவற்றைப் பொறுத்துக் கொண்டும் இருந்துள்ளதனாலும் ,

இச்சபை இவ்வரசாங்கத்தின் மீது நம்பிக்கையற்று இருப்பதனால் அது உடனடியாகப் பதவி துறக்க வேண்டுமெனக் கோருகிறது"

இந்த நம்பிக்கையில்லப் பிரேரணையை கீழ்க் கண்டவர்கள் கொண்டுவர இருக்கின்றார்கள்.

தினேஷ் குணவர்த்தன - மக்கள் ஐக்கிய முன்னணி.

அத்தாவுட செனவிரத்ன - லங்கா சமசமாஜக் கட்சி.

வாசுதேவ நாணயக்கார - நவசமசமாஜக் கட்சி.

தர்மசிறி சேனநாயாக்கா - சிறிலங்கா சுதந்திரக் கட்சி.

கே.பிரேமச்சந்திரன் - ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி.

www.tamilarangam.net

# தீர்வை நோக்கி......

- ஜீவராஜ்

**யாழ்ப்பாணக் குடா நாட்டைச் சுற்றி வளைத்துதிருந்த ராணுவம், குடா நாட்டிற்குள்ளும் நடவடிக்கைகளை ஆரம்பித்ததிலிருந்து, வடகிழக்கு யுத்தம் ஒரு புதிய திருப்பத்தையே எடுத்துள்ளது.**

புலிகளின் நிலைகளைத் தாக்குவது, ராணுவத்தின் நிலைகளை ஸ்திரமாக்குவது, புலிகளை நிராயுத பாணிகளாக்குவது என்ற அறிக்கைகளுடன் தொடரும் இந்தக் கண்மூடித்தனமான தாக்குதல்கள், குறிப்பிடப்படும் எந்த குறிகோள்களையும் அடையாமல் சாதாரண பொது மக்களைக் கொல்வதிலும், அங்கவீனர்களாக்குவதிலும், அகதிகளாக்குவதிலுமே வெற்றி கண்டு வருகிறது. அதி உயரத்திலிருந்து போடப்படும் குண்டுகளும், பல மைல்களுக்கப்பாலிருந்து ஏவப்படும் ஷெல்களும் பொது மக்கள் வதியும் இடங்களையும், அகதி முகாம்களையும் வேறுபாடின்றித் தாக்குகின்றன. வற்றாப்பளை அம்மன் கோவில் தாக்குதல், துர்க்கை அம்மன் கோவில் மீதான குண்டு வீச்சு ஆகியவை பொது மக்கள் கூடும் இடங்களை வேண்டுமென்றே தாக்கியதற்கான உதாரணங்கள். ஷெல் தாக்குதல்களிலிருந்து தப்புவதற்கு அகதி முகாம்கள் நாளுக்கு நாள் இடம் மாற்றப்படுகின்றன. இந்தத் தாக்குதல்கள் ஆரம்மாகிய நாட்கள் தொடக்கம் வட கிழக்கில் அமுல் நடத்தப்படும் ஊரடங்குச் சட்டத்தினாலும், குண்டு வீச்சுக்களினாலும், பொது மக்களுக்கு உணவு, மருந்து வகைகள் எடுத்துச் செல்லப்படுவது மேலும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எந்த நேரத்தில் எது நடக்கும் என்ற பீதியில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இதே நேரத்தில் கிழக்கிலும், தெற்கிலும் சுற்றி வளைப்புக்களும் கடத்தல்களும் கொலைகளும் தொடருகின்றன. அரசாங்கமும் இயக்கங்களும் உருவாக்கிய கொலைக் கலாச்சாரத்தின் மரண அனுபவங்களை மக்கள் இரத்தக் கண்ணீர் வடித்தபடி அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். தமது இராணுவ அரசியல் இலாபங்களுக்கும் (எரியும் இன மோதல்களில் எண்ணயை வார்க்கும் நோக்கத்துடனும்) புலிகளும் அரசும் மாறி மாறி அப்பாவி கிராம மக்களை படுகொலை செய்தவண்ணமிருக்கின்றன. அழிஞ்சிபத்தனை, கரபொல, முத்துகல கிராமங்களில் நடை பெற்ற கொலைகள் இவற்றின் கோரமான தொடர்ச்சிதான்..!

இவ்வாறு மக்களின் உணர்வுகள், விருப்பங்கள், எதிர்பார்ப்புக்கள் என்ன என்பதை அறியாத சூழ்நிலமைகளை அரசாங்கமும் புலிகளும் உருவாக்கிய பின்பு அவர்களே தேசிய இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு பற்றிப் பேசுவதுதான் ஆச்சரியமான விடயம்தான்! சிங்களப் பேரினவாதத்தின் ஒட்டு மொத்தமான உருவமான பிரேமதாச அரசாங்கத்தின் நடவடிக்கைகள் யாவும் தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு எந்தவிதமான சமூகமான தீர்வையும் காணும் நோக்கமாக் கொண்டிருந்தது கிடையாது. தமது இனவாத பாசிச நோக்கங்களை நிறைவேற்றுவதற்குக் காலத்திற்குக் காலம் வெவ்வேறு "குரல்"களில் பேசியும், வெவ்வேறு இழுத்தடிப்பு நடவடிக்கைகளை மேற் கொண்டும், தமிழ் இயக்கங்களை (அவர்களின் வங்குரோட்டுத் தனங்களைப் பாவித்து) ஒன்றோடு ஒன்றை மோதவிட்டும் தனது பதவியை ஆயுத பலாத்காரத்தினால் தக்க வைத்துக் கொண்டிருக்கும் இந்த பிரேமதாசாவின் அரசாங்கம் தேசிய இனப்பிரச்சனைக்கு ஒரு முறையான தீர்வை முன் வைப்பார்கள் என்று எதிர் பார்க்க முடியாது. தேசியப் பிரச்சனை என்பது நாட்டின் பொருளாதார, ஜனநாயக ப் பிரச்சனைகளிலிருந்து வேறுபட்ட அரசியல் பிரச்சனை அல்ல. பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியாமலும், ஜனநாயகத்தின் முழு விரோதியாகவும் செயற்படும் அரசாங்கம் - மனித உரிமை மீறல்களுக்கு ஒலிம்பிக் வெற்றிக் கிண்ணத்தையே பெறக் கூடிய அரசாங்கம் -, சாதாரண மக்களைப் பட்டினி போடும் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த முடியாத அரசாங்கம், இப்பிரச்சனைகளிலிருந்து சிங்கள மக்களின் கவனத்தை ஈர்க்க தொடர்ச்சியான ஒரு யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்ம் அரசாங்கம் - தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு முழுமையான அரசியல் தீர்வை முன்வைக்கப் போகிறது

என்று எண்ணுபவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளுகின்றார்கள். ( இன்று அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும் சகல தமிழ் இயக்கங்களுக்கும் இது பொருந்தும். )

புலிகள் இயக்கத்திற்கும் பிரேமதாசாவின் அரசாங்கத்திற்கும் இந்த விடயத்தில் எந்த வித வேறுபாடுமே கிடையாது. ஒரு மாபியாக் கும்பலிடமிருந்து தேசிய இனப்பிரச்சனைக்குத் தீர்வை எதிர்பார்க்க முடியாதுதான்! ஆனால் பலர், புலி இயக்கம் தமிழ் மக்களுக்காகப் போராடுகிறது, தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது என்ற மாயையில் இருப்பதால் அவர்களின் தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சனைக்கான தீர்வு என்ன என்பதையும் ஆராயத்தான் வேண்டும். "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்ற கோஷத்தை அவர்கள் தொடர்ந்தும் கூறி வந்தாலும் இது வரைகாலமும் அவர்களின் நடவடிக்கைகள் அது மட்டும்தான் அவர்களின் குறிகோள் என்பதை சந்தேகத்துரியதாக்கியிருக்கிறது. அவர்களுடைய நடவடிக்கைகள் அவர்களுக்கு இருப்பது ஒரே இரத்த தாகம்தான் என்பதைப் பல முறை நிரூபித்துள்ளன. மறுபுறத்தில் தமிழ் மக்கள் இது வரைகாலமும் அனுபவித்து வந்த சிறிதளவு மனித உரிமைகளையே இல்லாமற் செய்து விட்ட இவர்களுக்கு அவர்களின் உரிமைகளுக்காகப் போராட என்ன யோக்கியதை இருக்கிறது என்பதும் ஒரு கேள்வி. தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் மக்களுக்கு உரிமையை மறுப்பவர்கள், அந்த மக்களின் உரிமைகளுக்காகப் போராடுகிறார்கள் என்பது ஒரு ஏமாற்று வித்தைதான்! தனிமனித இலாபங்களுக்கும், கள்ளக்கடத்தல்களுக்கும் துணை போபவர்கள், வரி என்ற பெயரில் மக்களிடம் கப்பம் வாங்குபவர்கள், "புலிகளின் தேசம்" (என்று "உலகத்தமிழர் "புகழும் ) பகுதிகளில் மக்களை சிறிலங்கா அரசிடம் கையேந்தி நிற்க வைப்பவர்களிடம் பொருளாதாரம் பற்றியும் எதையும் எதிர்பார்க்க முடியாது. ஜனநாயக உரிமைகள், பொருளாதாரத்திட்டங்கள் இவைபற்றிய வேலைத்திட்டங்களே இல்லாத புலிகளிடம் அரசியல் தீர்வு உண்டா என்பதும் ஒரு கேள்வி. இவர்கள் முன்வைக்கும் தீர்வுகள் எவை என்பது இன்னும் விளங்காத புதிர்கள்தான். பதின் மூன்று மாதங்கள் பிரேமதாசாவுடன் என்ன பேசினார்கள் என்பது எவருக்கும் தெரியாது. ஆயுதம், பணம் ( மாபியா பாணியில் ) இவை தவிர மக்கள் உரிமை பற்றி என்ன பேசினார்கள் என்பதை எவருமே வெளியிடவில்லை. இன்று தொண்டமானையும் மற்றவர்களையும் "வாருங்கள், வாருங்கள் " என்று அழைப்பவர்கள் எதைப் பேச அழைக்கின்றார்கள் "தங்களின் தணியாத தாகத்தைப் " பற்றியா அல்லது வேறு ஏதாவது தீர்வுகளைப்பற்றியா ? தொடர்ச்சியான போர், தம்மை சுதாகாரித்துக் கொள்ளப் பேச்சு வார்த்தை என்ற ( பிரேமதாசா பாணியிலான ) தந்திரோபாயத்தையே இவர்கள் பாவிக்கின்றார்கள். ஒரு மாபியாக் குழு தனது அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளப் பாவிக்கும் தந்திரோபாயம் இதுதான். இவைகள் மக்களின் நலன்களின் அடிப்படையில் எடுக்கப்படுபவையும் அல்ல.

இந்த இரு பகுதியினருக்கும் இடையில நடைபெறும் யுத்தமும் பேச்சு வார்த்தைகளும் நாட்டின் பிரச்சனைகளை தீர்க்க உதவும் என்பது வெறும் பகற்கனவாகவே இருக்கும். இந்த இரு சக்திகளையும் நிராகரிப்பதன் மூலமே நாட்டின் பிரச்சனைகளுக்கான தீர்வின் முதற்படிகளையாவது மக்களி அணுக முடியும். உடனடியான யுத்த நிறுத்தம் , தேசிய இனப் பிரச்சனைக்கு, தமிழ் முஸ்லீம் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கிகரித்து, அதன் அடிப்படையிலான தீர்வு காணுதல், மக்களைப் பட்டினி போடும் விலைவாசி உயர்வுகளைக் கட்டுப் படுத்துதல், சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்தல், சகல விதமான மனித உரிமை மீறல் களையும் நிறுத்துதல் என்ற பொதுவான கோரிக்கைகளுடனான வெகுஜன இயக்க நடவடிக்கைகள் மூலமாகவே பிரேமதாசா அரசாங்கத்தை மக்கள் நிராகரிக்கச் செய்ய முடியும். இந்தப் பிரச்சனைகளுக்கான உண்மையான தீர்வுகளிலேயே புலிகளை தமிழ் மக்கள் நிராகரிப்பதும் தங்கியுள்ளது.

13 வது

## இலக்கியச்சந்திப்பு

நடைபெறும் இடம்.

பொன்

(ஜேர்மனி)

திகதி:

22.08.1992

தொடர்பு விலாசம்:

K.Thowfeek
Kiefern weg. 38,
Venusburg
5300 BONN - 1
GERMANY

www.tamilarangam.net

# சொல்லுவார் சொல்லுவாராயின்....



– கோம்ஸ்

தென் ஆபிரிக்காவை இலங்கை தோற்கடித்தது.

கிரிகட் செய்தி.

இது என்ன பெரிய வெற்றி? மனித உரிமை மீறல்களில் தென் ஆபிரிக்கவை முன்பே தோற்கடித்து விட்டோமே!

காடு அழிப்பு, மரக்கடத்தலுக்கு எதிராக கடும்தண்டனை, அபராதம்விதிக்க ஏற்பாடு-

அவசர கால ஒழுங்கு விதிகளின் கீழ் ஜனாதிபதி நடவடிக்கை.

- தலையங்கம்.

நாடழிப்பு, ஆட்கடத்தல் ஆகியவற்றைத் தொடர்ந்து செய்யும் இவர் மீது என்ன நடவடிக்கை ?

100 தமிழ் சிறுவர்களை பிக்குகளாக்க கோரிக்கை.

ஜனாதிபதிக்கு பிக்குமார் கடிதம்.

சிறுவர்களைப் பிடித்து மொட்டையடிப்பது புதிதான அனுபவமில்லை தமிழர்களுக்கு....

கட்டாயமாக பிக்குகளாக்கும் காட்டுமிராண்டித்தனம் பௌத்த தர்மமாகாது!

திருப்பதியில் இந்திய தலைவர்களை ஐக்கிய தேசியக் கட்சி குழுவினர் சந்தித்தார்கள்.

பத்திரிகைத்தலையங்கம்.

யார் தலை மொட்டையடிக்கப்பட்டது ?

"என் உயிருக்கு ஆபத்து, பாதுகாப்புத் தாருங்கள்"

முன்நாள் பிரதி பொலிஸ்மாஅதிபர் எதிர்க்கட்சித்தலைவிக்குக் கடிதம்

தலையிடியும் காச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும்!

விசர்நாய் கடித்து யாழ்.,கிளிநொச்சி பகுதிகளில் 10 பேர் மரணம்.

வடபகுதிச் செயதி.

விசர்ப்" கடித்து எத்தனைபேர் மரணம் ?

பனையில் தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் கோரி ஊர்வலம்.

வடபகுதிச் செயதி.

தெண்டர்கள் என்றும் தொண்டர்களாகவே இருக்க வேண்டுமென்று அதிகாரிகள் நினைக்கிறார்கள் போலும்.

பஞ்சாப்பில் சீக்கியரல்லாதவரை அகற்றும் நோக்கில் தீவிரவாதிகள் ஐந்து தமிழ் என்ஜினியர்களை படுகொலை செய்துள்ளனர்.

இந்தியச் செயதி.

சீக்கிய தீவிரவாத தலைவர் தமிழர்களுக்காகப் போராடப் போவதாக எனக்கொருவர் சென்னாரே...( அது வேற, இது வேற!!)

www.tamilarangam.net

சிறுகதை

# முற்றுகை



என்.எஸ்.எம்.இராமய்யா

## சரசு வேலைக்குப் புறப்பட்டாள்.

சேலைக்கு மேலாக இறுகக்கட்டிய படங்குச்சாக்கு கனமாய் உறுதியாய் இருந்தது. நான்காக மடித்திருந்த எட்டுமுழ வேட்டியைத் தலையில் போட்டுக் கூடையை எடுத்து கயிற்றை உச்சந்தலையில் மாட்டிக் கொண்ட போது, இவை யாவும் வேண்டாத மேலதிக பாரங்கள் என்று மனம் மெல்லப் பொருமி முணுமுணுத்தது.

லயத்திலிருந்து ரோடு வரைக்கும் இறங்கும் இருபது கருங்கல் படிக்கட்டுகளும் ஐஸ் துண்டங்களாக சில்லிட்டு வேர்த்திருந்தன.

ஏற்கனவே மலையை நோக்கிப் போய்க் கொண்டிருந்த சில அவள் வயதுப் பெண்கள் நின்று "சுருக்காவா" என்றனர். கூட்டத்தில் சங்கமம் ஆனதும் ஒருத்தியின் கோடிச்சேலை சட்டென சரசுவின் கண்களில் பட்டது.

"கோடியா?"

அவள் சிரித்தாள்.

"நல்லா இருக்குதடி" விரல்கள் வாஞ்சையோடு சேலையைத் தடவின. "அதுக்குள்ளே மலைக்குக் கட்டி நாசம் பண்ணணுமா?"

"ஒரு நாளைக்குத் தானே?"

"எப்ப வாங்கினே?"

"நா எங்கே வாங்கிறது? அண்ணன் வாங்கிட்டு வந்திருக்குது"

"டேயப்பா!கொழும்புக்காரக வந்திருக்காகளோ?"

எல்லோரும் சிரித்தனர்.

அந்த தோட்டத்திற்கு நேர் எதிரே இருந்த இன்னொரு தோட்டத்துத் தேயிலை மலைகளின் உச்சியில் வெயில் விழுந்து மங்கியிருந்தது.

அது கீழிறங்கி பெரிய பள்ளம் போலிருக்கும் இப்போது பனிப்புகார் மூடியிருக்கும் நாட்டுக்கும் தங்கள் தோட்டத்துக்கும் வர இன்னும் அரை மணி நேரமாவது ஆகும்.

ரோடிலிருந்து குறுக்குப் பாதை வழியாக இறங்கத் துவங்கினர். நெருக்கமான தேயிலைச் செடிகளின் பக்கவாதுகள் உரசப்பட்டு ஆடி பனி முத்துக்களால் கால்களை நனைத்த போது சர்வாங்கமும் புல்லரித்து எரிச்சலாக வந்தது.

"இன்னைக்கு எந்த மலை??"

"பதினெட்டு"

"ஐயோ சவர்க்காரம் கொண்டார மறந்துட்டேன். அட்டை புடுங்கித் திங்கப்போகுது"

"பயப்படாதே! நான் கொண்டாந்திருக்கேன்"

மலையில் கங்காணி கத்திக் கொண்டு நிறை போட்டுக் கொண்டிருந்தான். வீட்டிலேயே அலங்காரத்தை முடித்துக் கொண்டவர்கள் வந்ததும் நிறை பிடித்தனர். மற்றவர்கள் படங்கை உதறிக் கொண்டிருந்தார்கள்.

"சரசு சவர்க்காரத்தையும் புகையிலையையும் சேர்த்து காலில் தேய்த்துக் கொண்டு நிறைக்கு ஏறினாள்.கோடிச் சேலை கட்டியிருந்த தெய்வானை பக்கத்து நிறை பிடித்தாள்.

அவர்களுக்குப் பேசுவதற்கு நிறைய விசயங்கள் இருந்தன.தெய்வானையின் அண்ணன் கொழும்பிலிருந்து வந்திருக்கின்றான். அவனுக்குத் தான் சரசுவைக் கேட்டிருக்கிறார்கள். அப்புறம் என்ன?

கொஞ்ச நேரம் "பொலியோ பொலி"சத்தமாக இருந்தது. அந்தப் பக்கமாக "லோ லோ"என்று கத்திக்கொண்டு வந்த கங்காணியை நிறுத்தி, "பொலி சொல்லுங்க கங்காணியாரே"என்றனர் இருவரும். அவர் பொலி சொன்னால் கூடை வழியுமாம்! அவர் வாய் அவ்வளவு ராசியாம்!

ஐஸ்......

மிகவும் பொருத்தத்தோடு பொலி சொன்னார் கங்காணி.

இரண்டு மூன்று மரம் கொழுந்து எடுத்த பிறகு தெய்வானை ரகசியம் போல் "அப்பா ராத்திரி அண்ணனுக்கிட்டே சொல்லிருச்சு" என்றான்.

www.tamilarangam.net

"என்னென்னு?"

"இப்படி ஒன்னைக் கேட்டிருக்கின்னு"
ம் கனமான பொருள் ஒன்று நெஞ்சுக்குள் விழுந்த மாதிரி கனத்தது மனம்.

"அண்ணனுக்கு இன்னும் கொஞ்சம் சொணங்கிச்செய்யணும்னு நெனைப்பு போலவே இருக்கு. ஆனா அம்மா ஒடம்பு இருக்கிற நெலமையிலே சொணங்க முடியாது அப்படின்னு அப்பா சொல்லிடுச்சி"

அங்கு ஒரு யந்திரம் பழுதாகிவிட்டது. ஆகவே இவள் தேவைப்படுகிறாள்.....அதுவும் அவசரமாக.

இந்த சின்ன வட்டத்துக்குள் அந்த வாழ்க்கையின் மகத்துவம் அடங்கிவிட்டது அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது. அவளுக்கு முன்னால் பத்து யார் தூரத்தில் இருந்த முருங்கை மரக் கிளையில் ஒரு வாலாட்டிக் குருவி "கிறீச்கிறீச்" என்று குரல் கொடுத்தது. ஒவ்வொரு குரலுக்கும் வால் பணிந்து, உயர்ந்ததை, அழைப்பாகக் கொண்டோ, என்னவோ இன்னொரு குருவியும் விர்ரென்று பறந்துவந்து அமர்ந்தது. இரண்டு ஜோடியாக மாறி, மாறி கத்தின. பின்னர் பறந்தன.

---

**அங்கு ஒரு யந்திரம் பழுதாகிவிட்டது. ஆகவே இவள் தேவைப்படுகிறாள்.....அதுவும் அவசரமாக.**
**இந்த சின்ன வட்டத்துக்குள் அந்த வாழ்க்கையின் மகத்துவம் அடங்கிவிட்டது அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது.**

---

வெய்யில் விழத் துவங்கியது. அவர்களுக்கு முன்னால் நீண்டு ஏறுமுகமாக ஓடிய மழை ஒரு இடத்தில் தேங்கிக் "குப்"பென்று திரைபோல் எழும்பி உயர்ந்திருந்தது. நீர் கசியும் கற்பாறைகளையும் அதனுள் கருமையையும், கண்டமாகக் கொண்டிருந்த அந்த மலையின் உச்சியில் நீல கண்டனின் உச்சிப் பிறைபோல் வெய்யில் மரங்களின் பின்னால் மினுமினுத்தது. மாலையில் சரசுவின் வீட்டிற்கு கொழும்புப் பையன் வந்திருந்தான். அவள் வந்த நேரம் சரசுவையும் அவள் அண்ணன் பழனியையும் தவிர வேறொருவரும் இல்லை.

"வா ஓய்"என்று வரவேற்றான் பழனி. இருவரும் திண்ணையில் அமர்ந்தார்கள்.உள்ளே சரசு அடுப்பை பற்றவைத்தாள் தேனீர் ஊற்ற.

"எப்படி இருக்கு கொழும்பு?"என்றான் பழனி.

"இருக்கு"

"எங்கே வேலை செய்யிறே?"

"ஒரு இரும்புக் கடையிலே"

"என்ன வேலை?"

"நாட்டாமை வேலை தான்"

நாட்டாமை என்ற சொல் பழனிக்குப் புதிது. ஆகவே "என்ன ஆமை" என்று கேட்டுவிட்டுச் சிரித்தான். அடுத்த வீட்டில் இருக்கும் வடிவேல் கங்காணி அந்தப் பக்கமாகப் போனவர் நின்று பார்த்துவிட்டு "போடுசக்கை" எப்படி வந்தே? என்று கேட்டுக்கொண்டே வந்து திண்ணையில் அமர்ந்தார். அவருக்கு எப்பவும் எதிரே தெரியும் அனைவருமே சக்தி சொரூபங்கள்தான்!

"கொழும்புக்குப் போனதும் சிலுசிலுன்று ஆளே மாறிட்டியே" என்று பெருமைப்பட்டுக் கொண்டதை உள்ளே சரசுவும் அனுபவித்துச் சிரித்தாள். தற்செயாக அங்குமிங்குமாகப் போகும்போது லேசாகக் கவனித்ததில் அவளும் அப்படித்தான் எண்ணினாள்.

என்ன வேலை என்ன சம்பளம்" என்று கங்காணி கிண்டிக்கொண்டிருந்தார். கடைசியாகச் சொன்னார் "இஞ்சபாரு! இப்படி கொழும்பு கண்டின்னு போனா நஷ்டம் நமக்குத்தான் பாத்துக்க. ஒரு நாளைக்கு அஞ்சு ரூபா சம்பளங்குறே, ஆனா வீடு இல்லை. இங்கே மூணு ரூபா,ஆனா வீடு இருக்கு. கணக்கு எல்லாம் ஒண்ணுதான். ஆனா அங்கே நீ அநாதை, இங்கே அப்படி இல்லை. ஒனக்கு ஒண்ணுன்னா தட்டிக்கேக்க ஒரு பட்டாளமே ஓம்பின்னாலே வரும்டா..."

கொழும்புப் பையன் சிந்தனையிலாழ்ந்தான். கொழும்பு நகரின் ராஜபாட்டைகள் போன்ற ரோடுகள், பெரியபெரிய கட்டிடங்கள்.எப்படியாவது நாலுகாசு தேட முடிகின்ற வாய்ப்பு, இத்தனைக்கும் மேலாக அறிவை எந்நேரமும் சுறுசுறுப்பாக முடுக்கிக் கொண்டிருக்கும் சுற்றாடல் இவை அனைத்தும் அவனுக்குப் பிடித்திருந்தன. ஆனால் மனதில்எதிர்காலம் என்பது கேள்விக்குறியாக வளைந்து நின்றது.

கங்காணி தொடர்ந்தார். "ஒனக்கு கல்யாணம் கூடுது போலிருக்கே...."

"ஆமா"

"தேள்வை முடிஞ்சபொறகு 'இதை' எங்கே வைக்கப் போறே...இங்கேயா இல்லாட்டி கொழும்புக்குக் கூட்டிக்கிட்டு போகப்போறியா?"

சரசு செவியைக் கூர்மையாக்கிக்கொண்டு கவனித்தாள்.

(20ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ருஷ்யாவில் இடதுசாரிகளின் எதிர்காலம்?

உலகின் முதலாவது தொழிலாளர் புரட்சி நடந்தேறிய ருஷ்ய நாட்டில்.......................
அதன் பொருளாதார வளர்ச்சிக் குறைவு, முதலாளித்துவ நாடுகளின் ஆக்கிரமிப்பு யுத்தம், எதிர்ப்புரட்சி; இவற்றினால் தனிமைப்படுத்தப்பட்டு ......... அதிகாரிகளின் ஆட்சி..................................தனிக்கட்சி சர்வதிகாரம்............................
எனச் சீரழிவுகள் ஏற்பட்டன.
இதன் விளைவாக ஏற்பட்ட பொருளாதாரக் குழப்பங்கள், சலுகைகளை அனுபவித்த அதிகாரத்துவத்தினுள் ஏற்பட்ட ஆதிக்கப் போட்டி ஆகியவை சோவியத் குடியரசுகளைச் சிதறடித்து விட்டன. இன்று அகப்பட்ட பகுதிகளில் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது அதிகாரத்துவம் ---
வெவ்வேறு முகமூடிகளுடன்!
இந்த நிலைமைகளில் ருஷ்யக்குடியரசில் இடதுசாரிகளின் எதிர்காலம் பற்றிய ஒரு நோக்கு; இந்தக் கலந்துரையாடல்.

( ஆ.கு)

1992 ஏப்ரல் 22ம் திகதி முடிவடைந்த ருஷ்யாவின் மக்கள் பிரதிநிதிகளின் காங்கிரஸ் பொறிஸ் ஜெல்ஸ்டின் ஆட்சியை ஸ்திரமாக்கியது., ஆனால் ருஷ்யாவின் பொருளாதார நிலமைகள் அப்படி ஸ்திரமாக இருப்பதாகச் சொல்ல முடியாது. ஜனவரி மாதத்தில் செய்யப்பட்ட விலை மாற்றங்களின் பின்பு சனங்களின் வாழ்க்கைத்தரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த விலை உயர்வுகளைச் சரிக்கட்ட தொழிலாளர்களின் சில பகுதியினருக்குச் சம்பள உயர்வுகள் வழங்கப்பட்டன. உதாரணத்திற்குச் சுரங்கத் தொழிலாளர்கள் 10,000 லிருந்து 15,000 ரூபிள்கள் வரை மாத வேதனமாகப் பெற்றார்கள். மற்றைய அரச ஆதரவுள்ள தொழிலகங்களிலுள்ள தொழிலாளர்களும் விலை உயர்வுகளை ஓரளவு சமாளிக்கக் கூடிய சம்பள உயர்வுகளைப் பெற்றார்கள். ஆனால் மற்றைய தொழிலகங்களில் வேலை செய்தவர்கள், சாதாரண கந்தோர் உத்தியோகஸ்தர்கள், ஓய்வூதியம் பெறுபவர்கள், மாணவர்கள் ஆகியோரின் வருமானங்கள் அதிகரிக்கப்படாமையினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டனர். இப்படியான தொழிலாளர்கள் ஒரு மாதத்திற்கு 1000 ரூபிள்களையோ அல்லது அதற்கும் குறைந்த ஊதியத்தையே பெறுகின்றனர். இன்று ருஷ்யாவில் 5 கோடி மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலமைகளினால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள், சாதாரண தொழிலாளர்கள், போக்கு வரத்துத் தொழிலாளர்கள், மாணவர்கள் ஆகியோரது எதிர்ப்பு நடவடிக்கைகளை உருவாக்கியுள்ளன.

அரசாங்கத்தினதும் அதை ஆதரிக்கும் பத்திரிகைகளினதும் முழுமையான நோக்கம் பொருளாதார சீர்திருத்தங்களுக்கு சர்வதேச முதலாளித்துவ சக்திகளின் அங்கிகாரத்தைப் பெற்று, சர்வதேச நாணய நிதியத்திலும் (IMF), உலக வங்கியிலும் ருஷ்யாவிற்கு அங்கத்துவத்தைப் பெறுவதாகவே இருந்தது. ஆனால் புதிய சீர்திருத்தங்கள் பற்றி மக்களின் மனங்களில் சந்தேகங்களும் விரக்தியுமே உருவாகிக் கொண்டிருந்தன. சமீபத்தில் ஒரு பத்திரிகைக்கணக்கெடுப்பின்படி 6.4 %

www.tamilarangam.net

மான மக்கள் முழுமையாக அரசாங்கத்தை ஆதரித்தனர். 23.7%த்தினர் விமர்சனத்துடன் ஆதரித்தனர். 64.8%த்தினர் அரசாங்கத்தின் திட்டங்களுடன் கருத்து வேறுபாடுகள் கொண்டிருந்தனர்.

ஆனால் பெருகி வரும் இந்த அதிருப்தியானது வலதுசாரியான பொறிஸ் ஜெல்ஸ்டீனுக்கு அரசியல் சவாலாக இன்னும் உருப்பெறவில்லை. ஏப்ரலில், மக்கள் பிரதிநிதிகளின் காங்கிரசின் கூட்டத்தின் போது ஜெல்ஸ்டினின் பொருளாதார மந்திரி சர்வதேச முதலாளித்துவத்தில் தங்கியிருக்கும் தனது சீர்திருத்தங்களை முன் வைத்த போது அதற்கு எதிராக ஒரு எதிர்ப்பு முன்னணி, '"தாராளவாத ஜனநாயகவாதிகள்", "கம்யூனிஸ்ட்டுகள்", ஆகியோரிடையே உருவாகியது. அரச உடமையாக இருக்கும் ஸ்தாபனங்களைப் பாதுகாப்பதற்கும், தேசிய மூலதனமுள்ள ஸ்தாபனங்களை உருவாக்க வேண்டுமென்பதிலும் இவர்கள் ஒற்றுமைப்பட்டனர்.. 1992 ஜனவரி மாதத்தில் ஏற்பட்ட விலைவாசி உயர்வுகளைத் தொடர்ந்து பழைய கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் ஆகியோருடைய எதிர்ப்புத் தெருப்போராட்டங்கள், ஊர்வலங்கள் ஆகியவை நடைபெற்றன.

கடந்த மேதினத்தில் 50,000 மக்கள் திரண்டிருந்தனர்! இந்தக் கூட்டத்தில், ருஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி (RKRP) — இது ஒரு நவபிரஸ்நோவ் அமைப்பாகும் -- முக்கிய பங்கு வகித்தது. இது 150,000 அங்கத்தவர்களைக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. இத்துடன் பழைய கம்யூனிஸ்ட் கட்சியினுள் " மார்க்சிய மேடைக்குழு" வாக இயங்கியவர்களிடமிருந்து உருவாகிய சோசலிசத் தொழிலாளர் கட்சி (SPT), ருஷ்யக்கம்யூனிஸ்ட் கட்சி (RKP) ஆகியவையும் இந்த மேதினத்தில் பங்குபற்றின.

"ருறோடவயா ருசியா" (Trudovaya Rossiya) என்ற அமைப்பு பத்திரிகைச் செய்திகளில் அதிக இடங்களைப் பிடித்து வருகின்றது. இது பழைய சோவியத் யூனியனுக்கு உயிரூட்ட முயற்சிப்பதுடன், ருஷ்ய பேரினவாத கோஷங்களையும் எழுப்பி வருகின்றது. ஆனால் இந்தக்குழுவிற்குப் பெரும் ஆதரவு இருப்பதாகத் தெரியவில்லை. அதே போல ஜனநாயக சோசலிஸ்டுகள் இணைந்துள்ள தொழிலாளர் கட்சியும் (Party of Labour), வேறு அனாக்கிஸ்ட் மற்றும் இடதுசாரி சோசலிசக் குழுக்களும் அதிக ஆதரவைப் பெற்றதாகத் தெரியவில்லை.

தொழிலாளர் கட்சியின் வேண்டுகோளுக்கு இணங்க மஸ்கோ தொழிலாளர் சம்மேளனம் (MFP) கடந்த ஒக்டோபர் மாதத்தில் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கெதிராக பல ஆர்ப்பாட்டங்களைச் செய்தது. ஆனால் ஜனவரி விலை உயர்வுகளின் பின்பு அது அவ்விதமான ஆர்ப்பாட்டங்களைச் செய்யவில்லை. தொழிலாளர்களின் தற்போதைய மந்தமான போக்குகள் இடதுசாரிக்குழுக்களை மேலும் தனிமைப் படுத்தியுள்ளன.

இந்த நிலமைகளில் ருஷ்யாவிலுள்ள இடதுசாரிகளின் மூலோபாயங்கள் மற்றும் தந்திரோபாயங்கள் பற்றிய கலந்துரையாடல் அவசியமாகியுள்ளது.

**நான்காவது அகிலத்தின் ஐக்கிய செயலகத்தின் பத்திரிகைக் குழுவினர்** இந்த விடயம் பற்றி ஏப்ரல் மாதம் மஸ்கோவில் நடத்திய கலந்துரையாடல் ஒன்றில் கீழ் கண்டவர்கள் கலந்து கொண்டனர்.

**அலகஸ்சான்டர் புஸ்கலின்** : மஸ்கோ சர்வகலாசாலையின் பொருளாதாரப் பேராசிரியர். தொழிலாளர் கட்சியின் தலைவர்.

**பொறிஸ் சலாவின்** : "பிரட்வா" பத்திரிகையின் அரசியல் விமர்சகர். ருஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தவர்.

**வடிம் டாமியர்** : சரித்திரவியலாளர். பசுமைக்கட்சியின் ஸ்தாபகர். தற்பொழுது "அனார்க்கோ"கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்

இந்தக் கலந்துரையாடலின் சில முக்கிய பகுதிகளைக் கீழே தருகின்றோம்:

**கடந்த சில மாதங்களாக உருவாகிவரும் அரசியல் நிலமைகள் பற்றி என்ன நினைக்கின்றீர்கள் ? ஆட்சி செய்கின்ற தாராளவாதக் குழுவினருக்கும் பழைய கம்யூனிஸ்ட் கட்சியினருக்குமிடையில் அதிகமான மக்கள் பிரிந்து திரண்டிருக்கின்றனர். ஆனால் சோசலிச இடதுசாரிகள் பக்கம் மக்கள் குறைவாகவே அணிதிரண்டுள்ளனர். இது ஏன் ?**

**அலக்ஸ்சான்டர் புஸ்கலின்** : வழமையாகவே ஜனநாயக இடதுசாரி சக்திகள் இந்த நாட்டில் பலவீனமாகவே இருந்து வந்துள்ளன. முன்பு அதிகாரத்தில் இருந்தவர்களும், இன்று அதிகாரத்தில் இருப்பவர்களும் , புதிய தொழிலதிபர்களும் தங்கள் அரசியல் செல்வாக்கினை வளர்த்துள்ளனர். ஆனால் அடிமட்டத்திலிருந்து உருவாகும் சக்திகள் பலவீனமானவையாகவே இருக்கின்றன. சமூகரீதியான இந்தப் புறக் காரணிகளே முக்கியமான காரணமாகும்., ஆனால் சில அகக் காரணிகளும் உள்ளன. மிகவும் முக்கியமானது இடதுசாரிகள் சிதறுண்டு இருக்கின்றனர். அடுத்ததாக கூர்மையடைந்திருக்கும்

www.tamilarangam.net

தேசிய முரண்பாடுகளினால் பிரிந்திருக்கும் மக்கள் மத்தியில் ஜனநாயக இடதுசாரிகளின் செல்வாக்கு குறைவாகவே உள்ளது. ஆனால் இப்பொழுது மக்கள் கொபர்ச்சோவின் "பிரஸ்ரொறிக்கா"வின் உண்மையைத் தெரிந்து கொண்டுள்ளனர். அது அதிகாரத்தில் இருந்தவர்களுக்கெதிராக அதிகாரத்துவவாதிகளின் போராட்டமே என்பதையும், அதில் ஒரு புதிய ஆழும் குழு வெற்றி கொண்டுள்ளது.; இந்த வெற்றியில் மக்களுக்கு எந்த வித பங்குமில்லை என்பதையும் அவர்கள் உணர்ந்துள்ளனர். " பிரஸ்ரொறிக்கா" பலமான தேசிய விடுதலைப் போராட்டங்களை உருவாக்கியது. கொபர்ச்சோவுடனான அதிகாரத்திற்கான போராட்டத்தில் பல குடியரசுகள் சுதந்திரப் பிரகடணங்கள் செய்தன. ருஷ்யாவில் ஆரம்பமாகிய இந்த நடவடிக்கைகள் மற்றைய குடியரசுகளுக்கும் பரவின.

இப்பபொழுது "தேசப்பற்று" பற்றிய பேச்சுக்களே முக்கியமானவையாகி விட்டன. பழைய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு பகுதியினர் இந்த தேசிய வாத சுலோகங்களைக் கொண்ட பதாகைகளைத் தூக்கிப்பிடித்துக் கொண்டதன் விளைவாக, முடியாட்சி மீண்டும் வரவேண்டும் என்று கூறுபவர்கள் பக்கமாக (!),, சந்தைப் பொருளாதாரம் உருவாக வேண்டும் என்கின்ற வலதுசாரி ஜெல்ஸ்டினுக்கும் அவரது ஆதரவாளர்களுக்கெதிராக நிற்கின்றனர். இந்த சூழ்நிலைமைகளில் ஒரு மூன்றாவது வழியை முன்னெடுப்பது கஷ்டமாகவே உள்ளது.

**பொறிஸ் சலாவின்** : ஜனநாயக இடதுசாரிகளின் பலவீனங்களுக்கு நீங்கள் கூறும் காரணங்களை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இடதுசாரி அமைப்பென்பது இங்கு கம்யூனிஸ்ட் இயக்கத்துடன் இணைந்ததாகவே கருதப்பட்டு வந்தது. அதனால் அந்த இயக்கம் சர்வதிகார ஸ்டாலினிசத் தன்மை கொண்டதாகவும் கருதப்பட்டது. கம்யூனிஸ்டுகள் பற்றிய வெறுப்பான கருத்துக்களே இன்னும் நிலவுகின்றன. - தற்போது சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சாதாரணமாக "இடதுசாரி", "வலதுசாரி", "கம்யூனிஸ்ட", "கம்யூனிஸ்ட அல்லாத" என்ற பதங்களை நாம் கவனமாகவே பாவிக்க வேண்டும். உண்மையில் இங்கு இடதுசாரி இயக்கங்களிலும் வலதுசாரி இயக்கங்களிலும் கம்யூனிஸ்டுக்களே இருக்கின்றனர் ! தாராளவாதக்குழுக்கள், வலதுசாரிக்கட்சிகள், இடதுசாரிக்குழுக்கள், ஏன் நவபாசிசக்குழுவான "பாமியற்"( Pamiat) க்குள்ளும் கம்யூனிஸ்டுகள் இருக்கின்றார்கள்! ! ஆகையினால் சிதறிப் போயிருக்கும் பழைய கம்யூனிஸ்ட் கட்சியை மீண்டும் உருவாக்க முடியுமென நான் நினைக்கவில்லை. அதன் தலைவர்கள் ஸ்டாலினிசத்திலிருந்து சமூகஜனநாயக வாதத்திற்கும், அதிலிருந்து தாராளவாதத்திற்கும், பின்பு சந்தைப் பொருளாதார நிலைப்பாடுகளுக்குமாக, - காட்டிக் கொடுப்பாளர்களாக -, மாறியதன் விளைவு இது. கொபர்ச்சோவும், ஜெல்ஸ்டினும் இந்தப் பாதையில்தான் சென்றார்கள்.



**அலக்ஸ்சான்டர் புஸ்காலின்**: "காட்டிக் கொடுத்தவர்கள்" என்ற பதத்தை நான் பாவிக்க மாட்டேன். அவர்கள் ஆரம்பத்திலிருந்தே துரோகிகளாக இருந்தனர். மக்களிடமிருந்து அன்னியப்பட்ட அதிகாரத்துவத்திலிருந்தவர்கள். தங்களுடைய சொந்த நலன்களைப் பேணும் குழுக்கள் என்றுதான் இவர்களை விபரிக்க முடியும். அதிகாரத்துவத்தின் சலுகைகள் மிக்க அந்தஸ்த்தைப் பேணுவதற்கு அவர்கள் எந்த விதமான நிலைப்பாடுகளையும் எடுக்கத் தயாராக இருந்தனர்.:

ஸ்டாலினிசத்தால் அது முடியுமென்றால் அவர்கள் ஸ்டாலினிஸ்டுகளாக இருந்தனர்; பிரஸ்நோவிசத்தால் அது முடியுமென்றால் அவர்கள் பிரஸ்நோவிசவாதிகளாக இருந்தனர்; சமூக ஜனநாயகவாதிகளாக வேண்டிய காலம் வந்ததும் அவர்கள் அதுவாக மாறினார்கள்! . அப்படியே அவர்கள் மாறிக் கொண்டே போனார்கள். ஆனால் அவர்கள் உண்மையான ஜனநாயகவாதிகளாக ஒருபோதும் இருக்கமாட்டார்கள். ஏனென்றால் அவர்களுடைய அதிகாரத்துவத்தை உடைத்தெறிவதன் மூலமே அது சாத்தியமாகும்.

**பொறிஸ் சலாவின்** : அது சரியானதே, ஆனால் இடதுசாரிகளுக்கு இன்று அரசியல் செல்வாக்கு இல்லை

www.tamilarangam.net

என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. சமீப காலத்தில் அவர்களின் செல்வாக்கு அதிகரித்துள்ளது. 1991 ஆகஸ்ட் மாதத்திற்குப் பின்பு மூன்று இடதுசாரிக்கட்சிகள் உத்தியாக ரீதியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை ; சோசலிசத் தொழிலாளர் கட்சி (SPT), ருஷ்ய கம்யூனிச தொழிலாளர் கட்சி (RKRP), ருஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி ( RKP). இப்பொழுது அதிக செல்வாக்கைப் பெறக்கூடிய தொழிலாளர்கள் கட்சி (PT) பதிவு செய்ய ஆயுத்தமாகவுள்ளது.


அங்கத்தவர்கள் எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில் ருஷ்யக்கம்யூனிஸ்ட் கட்சியைத் தவிர (RKRP), மற்றவைகள் சிறியவைதான், ஆனால் அவை வளருகின்றன. ஆகையினால் நாம் அதிகமாக நம்பிக்கைகளை இழக்கக்கூடாது. மேலும் இடதுசாரி சக்திகள் ஒன்று கூடும் சாத்தியக்கூறுகளும் தென்படுகின்றன. முதலில் அது ஒரு ஐக்கிய மாநாடாக இருக்கலாம். - ஒரு ஐக்கியமான சக்தி வலுப்பெறலாம்.- அதன் பிரசுரங்களுடன், பத்திரிகைகளிடமும் செல்வாக்கைப் பெறலாம். இதன் மூலம் அதன் குரல் மக்களுக்கு எடுத்துச் செல்லப்படலாம்.

**வடிம் டாமியர்** : என்னுடைய கருத்துப்படி இந்த நாட்டில் இன்று ஒரு இடதுசாரி இயக்கம் என்பது இல்லை. ஒரு சாதகமான வேளையில் வளர்ச்சியடையக் கூடிய சில ஆரம்ப நிலையிலுள்ள குழுக்களே உள்ளன..

தீவிர இடதுசாரிகள், மிதவாத இடதுசாரிகள், "இடது" என்று சொல்லிக் கொண்டு அதீத வலதுசாரிகளான பாசிசக் குழுக்களுடன் இணையத் தயாராக இருப்பவர்கள் ஆகியோரை நாம் பிரித்தறியத் தெரிந்து கொள்ள வேண்டும். கடைசியாக நான் குறிப்பிட்டவர்கள் பெயரளவில் தான் இடதுசாரிகள். மிதவாத இடதுசாரிகளுக்கு இரண்டு விதமான குணாம்சங்கள் இருக்கின்றன. முதலாவது அவர்கள் தாரளவாத சந்தைப் பொருளாதாரவாதிகளுடன் சில சமரசங்களைச் செய்து கொண்டுள்ளனர். இந்த அமைப்புகளின் வேலைத் திட்டங்களில் சந்தைப் பொருளாதாரத்தை ஏற்றுக் கொள்வதைக் காணலாம். அது சமூக நீதிகளைப் பேணுவதாக இருக்க வேண்டும் என விரும்புகிறார்கள் !

இரண்டாவதாக வீதிப் போராட்டங்கள் பற்றி மிக அவதானமாக இருக்கின்றார்கள் ! கடந்த இலையுதிர் காலத்தில் மிகப்பெரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை ஆரம்பித்தார்கள். ஆனால் டிசம்பர் மாதத்திலிருந்து அவற்றைக் கைவிட்டு விட்டார்கள். தற்போது வீதிப் போராட்டங்கள் தேசியவாதிகளினாலேயே நடத்தப் படுகின்றன.

மஸ்கோவில் நடைபெறும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு வருபவர்கள் ஸ்டாலினிஸ்டுகளோ அல்லது தேசியவாதிகளோ அல்ல. தற்போதைய பொருளாதார நிலமைகளினால் பாதிக்கப்பட்ட சாதாரண மக்களே தங்களுடைய எதிர்ப்பைக் காட்டக் கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்துகின்றார்கள். இந்த மக்கள்



From Pravda, January 4, 1992

வலதுசாரிகளினதும் தேசியம் பேசும் "இடது"சாரிகளினதும் பின்னால் போக மிதவாத இடதுசாரிகளினால் கைவிடப்பட்டுள்ளனர்.

தீவிர இடதுசாரியினர் மிகச் சிறிய தொகையினரே இருக்கின்றனர். இவர்களுள் "அனாக்கிஸ்டுகள்", ரொட்ஸ்கியவாதிகள் எல்லோரும் இருக்கின்றனர். நாம் சிறு தொகையினராக இருந்தாலும் பல நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றோம். மஸ்கோவில் பல ஆர்ப்பாட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்தியுள்ளோம்.

மிதவாத இடதுசாரிகள் முறையான வேலைத்திட்டங்கள் எதுவும் இல்லாமலும், தீர்க்கமான தீர்மானங்கள் எடுக்க முடியாதவர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் தொகையிலும் குறைவாகவே இருக்கின்றனர்.

தீவிர இடதுசாரிகளைப் பொறுத்தமட்டில் அவர்களுக்கு உறுதியான நோக்கங்கள் இருக்கின்றன. ஆனால் சிறு தொகையினராகிய நாம் நாட்டின் நடவடிக்கைகளில் பாதிப்புகளை ஏற்படுத்த முடியாது. உண்மையான சுதந்திரமான தொழிலாளர் இயக்கமொன்று இல்லாதபடியினால் நிலமைகள் மோசமாகிக் கொண்டு வருகின்றன.

**சுதந்திரமாக இயங்கிய சுரங்கத் தொழிலாளர் சங்கம் போன்ற தொழிற்சங்கங்களை ஜெல்ஸ்டின் குழுவினர் தம்முடன் இணைத்துக் கொண்டனர் போல தெரிகிறது. உத்தியோகபூர்வமான தொழிற்சங்கங்கள் பற்றி உங்கள் கருத்தென்ன ?**

www.tamilarangam.net

**அலக்ஸ்சான்டர் புஸ்கலின** : நிலமை மிகவும் சிக்கலானது.; தொழிலாளர் வர்க்கத்தின் பெரும் பகுதியினர் தற்போதைய அரசாங்கத்தை ஆதரிப்பவர்களாகவே இருக்கின்றனர். சிறு சிறு சலுகைகளுக்காகவும் சிறிய மாற்றங்களுக்காகவும் போராடுவதுடன் அவர்கள் நின்று விடுகின்றார்கள். அரசாங்கத்திற்கு ஒரு சவாலாக இருக்க அவர்கள் விரும்பவில்லை. சுரங்கத் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டிலும் இதுவே உண்மையாகும்.

இதற்கான காரணம் தொழிலாளர்களின் தன்மையில், குறிப்பாக கூலி உழைப்பாளர்களின் தன்மையில் தான் தங்கியிருக்கின்றது. இந்தத் தொழிலாளர்கள் அரசினால் வேலைக்கமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அரசே முதலாளியாக இருப்பதால், பல சமூக பாதுகாப்புக்களையும் பெறுகின்றனர். அதே சமயம் முழுமையான ஒடுக்கு முறைகளினால் எந்த விதமான சுய செயற்பாடுகளையும் இழந்திருக்கின்றார்கள். இது ஒரு மந்தமான நிலமையை உருவாக்கியுள்ளதுடன் , அரசிடம் சில சுயநலக் கோரிக்கைகளை முன்வைக்கக் கூடிய ஒரு சீரழிந்த தொழிலாளர் இயக்கத்தையே உருவாக்கியுள்ளது.

அதே வேளையில் நமது நாட்டில் இருக்கும் சோசலிச சக்திகளின் அடிப்படையில் இன்னுமொரு வழியும் இருக்கின்றது. 1989 வேலை நிறுத்தத்தின் போது தொழிலாளர்கள் மத்தியில் காணப்பட்ட சுய அமைப்பு முறைகள் பற்றியே குறிப்பிடுகின்றேன். - இவற்றை நாம் பாவிக்கவில்லை.

நாம் இப்பொழுது "குஸ்பாசி"ல் ஒரு நிலமையைப் பார்க்கின்றோம். முன்பு வேலைநிறுத்தம் செய்த கமிட்டிகளே மற்றைய பகுதிகளிலுள்ள தொழிலாளர்கள் தகுந்த வசதிகள் கோருவதை எதிர்க்கின்றனர். இவ்வாறான தொழிலாளர் மத்தியிலிருக்கும் பிரிவுகள். உடைவுகள், தனிமைப்பட்டு நிற்பது எல்லாம் பழைய ஆட்சியாளரின் காலத்தில் காணப்பட்டவை.




குழப்பத்திலிருந்து வெளியேற வழி ?

வருங்காலத்தில் மேலும் சீரழியும் பொருளாதார நிலமைகள் தீடீர், தீடீரென எதிர்ப்பு நடவடிக்கைகளை உருவாக்கலாம். ஆனால் இவற்றினால் நன்மையடையப் போவது தேசியவாத கம்யூனிஸ்டுகளும், பேரினவாத சக்திகளுமேயாகும்; அவர்களினாலேயே இந்த அதிருப்தியாளர்களுக்கு எதிர்ப்புகளை வெளியிட உதவ முடியும்.

துரதிர்ஷ்டவசமாக அடிமட்டத்திலுள்ள தொழிலாளர்களின் அமைப்புக்கள் உருவாகவில்லை. தீடீரெனத் தோன்றும் வேலைநிறுத்தங்கள் எந்த விதமான அமைப்புக்களையும் தோற்றுவிக்காமல் மறைந்து விடுகின்றன. 1990 மே மாதத்தில் நடை பெற்ற சுதந்திரத் தொழிலாளர்களின் மகாநாட்டில் தொழிலாளர்களின் சுயநிர்வாகம், கூட்டு உடமை ஆகியவற்றில் நம்பிக்கை கொண்ட சோசலிசக்குழுவொன்று உருவாக்கப்பட்டது. ஆனால் அந்தக்குழுவை மீள இயங்க வைக்க எடுத்த முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை. சில சிறிய சுதந்திர தொழிற்சங்கங்களும் குழுக்களுமே சாத்தியமாகின.

**பொறிஸ் சலாவின்** : அரசாங்கம் தொழிலாளர்களைப் பிரித்தாளும் கொள்கையையே கையாளுகின்றது. இதற்கான உதாரணம்தான் பத்து மடங்காக உயர்த்தப்பட்ட சுரங்கத் தொழிலாளர்களின் சம்பளங்கள். சுரங்கத் தொழிலாளர்கள் மாதமொன்றிற்கு 13,000 லிருந்து 15,000 ரூபிள்களைச் சம்பளமாகப் பெறும் பொழுது ஆசிரியர்களும் சாதாரண தொழிலாளர்களும் 1000லிருந்து 1500 ரூபிள்களையே பெறுகின்றனர். சுரங்கத்தொழிலாளர்களுக்குச் சலுகை காட்டிய ஸ்டாலின் காலத்திலேயே இவ்வாறாக சம்பளத்தில் வித்தியாசம் இருக்கவில்லை. அப்பொழுது வித்தியாசம் ஒன்றுக்கு ஆறாக இருந்தது, இப்பொழுது வித்தியாசம் ஒன்றுக்குப் பத்தாக அதிகரித்துள்ளது.

இவ்வாறான சம்பள வித்தியாசங்கள் வெவ்வேறான தொழிலாள இயக்கங்களுக்குள் முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளன. தற்பொழுது இந்த வெவ்வேறு பகுதிகளை ஒன்றிணைக்க் கூடிய தொழிற்சங்கங்கள் இல்லை. இதுதான் இன்றைய தொழிற்சங்க இயக்கத்தின் முக்கியமான பலவீனமாக உள்ளது. இதனாலேயே தொழிலாளர்களின் இயக்கங்களை ஐக்கியப் படுத்துவதே இடதுசாரி இயக்கங்களின் முக்கிய கடமையாக உள்ளது. இதைச் செயவதற்கு இடதுசாரிகள் முதலில் ஐக்கியப்பட வேண்டியுள்ளது. இது சாத்தியமானால், அரசாங்கத்தின் தொடரும் பொருளாதாரக் கொள்கைகளினால் உயரும் விலைவாசிகளுக்கெதிராக உருவாகப் போகும் வெகுசன இயக்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வாய்ப்புகள் உண்டு. இந்த இலையுதிர் காலத்தில் தொழிலாளர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கும் சாத்தியக் கூறுகள் உள்ளன. இடதுசாரிகள் ஐக்கியப்பட்டு முற்போக்குத் தொழிற் சங்கங்களுடன் இணைய முடியுமானால் - முன்னேற இடமுண்டு.

**வடிம் டாமியர்**: போலந்தில் ஜெனரல் ஜறுசெல்ஸ்கி பதவியிலிருந்து அகற்றப்பட்ட பின்பு உருவாகிய

www.tamilarangam.net

நிலமைகளுக்குச் சமமாகவே இங்கும் நிலமைகள் உள்ளன. முன்பு இருந்த உத்தியக பூர்வமான ( அரசாங்கசார்பு) தொழிற்சங்கங்களும் சுதந்திர தொழிற்சங்கங்களும் இடம் மாறிக் கொண்டன. புதிய தொழிற்சங்கங்களை ஆதரிக்கும் குழுக்கள் அதிகாரத்திற்கு வந்துள்ளன. சுதந்திர சுரங்கத் தொழிலாளர் சங்கம் "குப்பாசி"ல் நடைபெறும் வேலைநிறுத்தத்தை ஆதரிக்கவில்லை. என அறிவித்திருக்கின்றது. சந்தைப் பொருளாதாரம் மற்றும் அரசாங்கத்தின் பொருளாதார வேலைத் திட்டங்களுக்கு இடையூறு விளைவிக்கக் கூடாது என்பது அவர்களின் கருத்து !

இந்தத் தெழிற்சங்கத்தில் இருக்கும் ஒவ்வொருவரும் இப்படி எண்ணுகிறார்கள் என்பதில்லை. இவர்களுக்குள்ளேயும் சில பிரதேசங்களில் எதிர்ப்பு காட்டுபவர்கள் இருக்கின்றார்கள். முழு சமுதாயத்தின் நலனுக்காக தொழிற்சாலைகள் தொழிலாளர்களின் கூட்டு உடமையாக்கப்பட வேண்டுமென்ற கருத்தை இவர்கள் கொண்டிருக்காவிட்டாலும் , அரச உடமையாக ஸ்தாபனங்கள் தொடர்ச்சியாக - முதலாளித்துவ முறைக்கு மாற்றப்படாமல் - இருக்க வேண்டுமென்ற கருத்துடையவர்கள் இருக்கின்றார்கள்.

உத்தியோக தொழிற்சங்கங்களுக்கு அமைப்பு ரீதியான பலவீனங்கள் இருக்கின்றன. முதலாவதாக அவர்களுக்கு அடிமட்டத் தொழிலாளர்களுடன் தொடர்புகள் இல்லை. உத்தியோக பூர்வமான தொழிற்சங்கங்கள் உண்மையில் தொழிற்சங்கங்களே அல்ல. அவை சமூக காப்புறுதிகளையும், விடுமுறைகளையும் பங்கீடு செய்யும் அமைப்புகள்தான்.

இரண்டாவதாக அவர்களின் பலவீனம் அவர்களின் அதிகாரத்துவ அமைப்பு முறைதான். புதிய தொழிற் சங்கங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. அவர்களின் புதிய அமைப்பிலும் அதிகாரத்துவ முறை உருவாகியுள்ளது.


உத்தியோபூர்வ தொழிற்சங்கங்களில் இரண்டு விதமான போக்குகளைக் காணக் கூடியதாக இருந்தது. ஒன்று அரசாங்கத்துடன் சமரசமான போக்கு. ( உ+ம்: ருஷ்ய சுதந்திர தொழிற்சங்க சமேளனத்தின் தலமைகள்), இரண்டாவதாக நடுநிலையான பாதையில் தொடரும் தொழிற்சங்கங்கள். ( உ+ம் : மொஸ்கோ, லெனின்கிராட் நகரங்களில் உள்ள தொழிற்சங்கங்கள் )

தொழிலாளர் இயக்கத்தில் இன்று காணப்படும் தன்மை தோழமையற்ற சுயநலப் போக்குத்தான். ஒவ்வொரு கிளையும், ஒவ்வொரு பகுதியினரும், ஒவ்வொரு தொழிற்சாலையிலுள்ளவர்களும், ஒவ்வொரு பிரதேசத்திலுள்ளவர்களும் தங்களுக்குத் தேவையானதைச் சுவீகரித்துக் கொள்ள முயலுகின்றனர். மற்றவர்களுக்கு என்ன நடந்தாலும் அவர்கள் அக்கறைப் படுவதில்லை!

**தொழிலாள வர்க்கத்திற்குள்ளும், அமைப்புகளுக்குள்ளும் உள்ள சக்திகளின் நிலமைகள் சதாகமற்றவைகளாகவே இருக்கின்றன. அப்படியானால் சுமாரான சக்தியுள்ள இடதுசாரிகள் இந்த நிலமைகளில் எவ்வாறு தலையிட முடியும். ? எப்படியான கோரிக்கைகள், செயற்பாடுகள் மூலம் அவர்கள் போராட்டங்களில் இணையலாம் ? பெருமளவிலான தனியார் மயப்படுத்தல் முபற்சிக்கப்படும் பொழுது "தொழிலாளர்களின் சுயநிர்வாகம்" என்ற கோஷம் எப்படியான பாதிப்புக்களை ஏற்படுத்தும் ?**

**பொறிஸ் சலாவின்** : நாட்டின் ஆட்சியாளர்கள் தொழில் ஸ்தாபனங்களின் பெரும்பான்மையான மூலதனப் பங்குகள் தனிமுதலாளிகளின் கைகளில் இருக்கக் கூடிய நிலமைகளை உருவாக்க முயற்சிக்கும் சந்தர்ப்பத்தில், தொழிற்சாலைகள் தொழிலாளர்களின் கூட்டுக் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டுமென்ற கோஷம் தேவையானதும் சிறந்ததுமாகும். இந்த கோஷம் உற்பத்தி சாதனங்களைத் தொழிலாளர்களின் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் எண்ணம் கொண்டவர்களை ஒன்றிணைக்கவும் உதவும்.

ஆனால் ருஷ்யாவில் புதிய சமுதாயத்தை உருவாக்குவதற்கு இதுதான் முக்கியமான கோஷம் என்று நான் கருதவில்லை. ஒரு பொதுவான தொழிலாளர்களின் சுயநிர்வாகங்கள் சமீப காலத்தில் ஏற்படுவதையோ அல்லது அதன் அடிப்படையில் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும் என்றோ நான் கருதவில்லை.



இடதுசாரிகள் உண்மையான இயக்கத்தை உருவாக்கினால் அத்துடன் மற்றைய ஜனநாயக சக்திகளுடன், அரசாங்க மட்டத்தில் அல்லது ஒரு தோர்தலின் ஊடாக, ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய ஒரு கூட்டை ஏற்படுத்தும் சாத்தியம் ஏற்பட்டால், தொழிலாளர் சுய நிர்வாகத்தைப் பற்றிச் சிந்திக்கலாம். ஆனால் பல விதங்களில் இந்த முயற்சிகள் பின்னடைவு பெற்றிருக்கின்றன. தொழிற்சாலைகளில் தெரிவு செய்யப்பட்ட தொழிலாளர்கள் சபைகளை அரசாங்கம் இப்பொழுது கலைக்க முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கின்றது. 1986 - 87 களில் பலமாக ஒருந்த தொழிலாளரின் சுயநிர்வாகத்திற்கான கருத்துக்கள் தற்பொழுது பலவீனமடைந்திருக்கின்றன.

**வடிம் டாமியர்** : இடதுசாரிகள் மத்தியில் தொழிலாளர்கள் சுயநிர்வாகம் பற்றி மூன்று விதமான கருத்துக்கள் உள்ளன. முதலாவதாக தொழிலாளர்களின் சுயநிர்வாகம் என்பது இன்று இருக்கும் அமைப்புமுறைக்குப் பிரதியீடாக, உருவாக்கப்படுவது. அது முழுசமுதாயத்திற்குமே பொருந்தக் கூடியது. இதுதான் எங்களுடைய நிலைப்பாடு.

இரண்டாவது ருஷ்ய தொழிலாளர் கட்சி, மிகானோவ் போன்றவர்களினால் முன் வைக்கப்படும் கருத்து. உற்பத்திசாதனங்கள் யாவும் பொதுவுடமையாக இருக்க வேண்டும். தொழிலாளர்களின் கூட்டு அவற்றைப் பிரயோசனமான முறையில் நிர்வகிக்க வேண்டும். அதாவது தொழிலாளர் கூட்டு தொழிற்சாலைகளை நிர்வகிக்க வேண்டும். இலாபங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். தொழிற்பிரிவுகளையும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதாகும்.

மூன்றாவது மிதவாத "இடதுசாரிகளும்", சில தொழிற்சங்க சக்திகளும் ஆதரிக்கும் "சுயநிர்வாகம்" ; இது ஒரு விதமான தனியார் மயப்படுத்துதல்!

என்னைப் பொறுத்தவரையில் இடதுசாரிகள் அதிகாரத்திற்கு வருவதற்கு எந்த விதமரன குறுக்கு வழிகளும் கிடையாது. கட்டாயமாக ஜனநாயகவாதிகளுடன் கூட்டரசாங்கம் அமைத்து அவர்கள் அதிகாரத்திற்கு வரமுடியாது. மேல் மட்டதிலுள்ளவர்களினால் உருவாக்கப்படும் "சுயநிர்வாகங்கள்" நாட்டின் பிரச்சனைகளைத் தீர்க்க மாட்டாது. கீழேயுள்ள தொழிலாளர்களினால் உருவாக்கப்படும் தொழிலாளர்களின் சுயநிர்வாகத்தினாலேயே காரியங்களைச் சாதிக்க முடியும். அப்படியில்லாவிடால் பிரஸ்ரொறிக்காவின் கீழ் கடந்த ஐந்து வருடங்கள் நடந்தவைகளே மீண்டும் நடைபெறும். இந்தக் காலத்தில் பலமான வெகுஜன இயக்கங்கள் உருவாகின . இந்த வெகுஜன இயக்கங்கள் மேலே சில தலைவர்கள் எழுந்தனர். அவர்கள் இந்த வெகுஜன இயக்கங்களைத் தமது ஆதரவுக் கூட்டங்களாக மாற்றிக் கொண்டனர்.

எதிர் வரும் மாதங்களில் அரசாங்கத்தின் பொருளாதாரத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படும். இதன் விளைவாக பல பொதுத்தொழில் ஸ்தாபனங்கள் மூடப்படக்கூடும். இதனால் வேலை இழப்பவர்கள் பெறப்போகும் உதவிப்பணம் மிகச் சிறிய தொகையாகும். இந்த நிலமைகளில் என்ன செய்ய வேண்டும் ? வேலையை இழக்கவிருக்கும் தொழிலாளர்கள் உள்ளிருப்புப் போராட்டங்களை ஆரம்பிக்குமாறு நாம் புத்திமதிகள் கூறவேண்டும். - இடதுசாரிகள் இப்போராட்டங்களில் தமது பங்களிப்புகளைச் செய்ய வேண்டும்.

**அலக்ஸ்சான்டர் புஸ்காலின்** : "சுயநிர்வாகம்" என்ற கோட்பாட்டைப் பல்வேறு சூழ்நிலமைகளில் உபயோகப்படுத்தலாம். வெவ்வேறு விதமான தனியார் மயப்படுத்தும் முயர்ச்சிகளின் போது, அரசின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட முயற்சிக்கும் பொழுது, அதிகாரத்துவத்தின் கைகளிலிருந்து உடமைகளை எடுக்கும் பொழுது - ஆகியவை இந்த சூழ்நிலமைகள்.

முதலாவது படியாக தொழிலாளர் கூட்டு ஒரு நிர்வாகியாக உருவாக வேண்டும். இது "தொழிலாளர் கூட்டு" முழுஸ்தாபனத்தின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதன் மூலமோ அல்லது கூட்டாக ஒரு ஸ்தாபனத்தை உடமையாக்குவதன் மூலமோ சாத்தியமாகலாம். இந்த நடவடிக்கைகளில் "தொழிலாளர் கூட்டுக்கும்" தொழிற்சங்கங்களுக்கும் தொடர்புகளுண்டு.

இரண்டாவதாக சமூக மற்றும் அரசியல் அமைப்புக்களில் சுயநிர்வாகத்திற்காகவும், அடிமட்ட ஜனநாயகத்திற்காகவும் நாம் போராட வேண்டும். இது மிகவும் முக்கியமானது. உதாரணமாக மக்கள் குடியிருக்கும் பகுதிகளில் சுயநிர்வாகத்திற்காகப் போராடுதல் ஒன்றாகும்.

இந்த முயற்சிகளில் தோல்வியடைந்தாலும் மீண்டும் அவை உயிர்த்தெழும். அவை எழிச்சியடைந்து மீண்டும் அதிகாரத்துவப் போக்கினால் வீழ்ச்சியடைந்து, மீண்டும் புதிய உருவில் , புதிய இடத்தில் இவை தோற்றமளிக்கும். இது கடந்த மூன்று வருடங்களாக நடந்து வந்துள்ளது. இது ஒரு சாதாரண நடைமுறைதான்.; இந்த வளர்ச்சிகள் உயர்ந்த மட்டத்தில் ஐக்கியப்ப முடியாதபடியினால் தனித்து விடப்பட்டு அழிகின்றன.

மூன்றாவதாக சுயநிர்வாகம் , அடிமட்ட ஜனநாயகம் ஆகியவற்றை - சுருங்கச் சொல்வதானால் ஜனநாயக வழிமுறைகளை பொருளாதார நடைமுறைகளில், அரசியலில், சமூக நடவடிக்கைகளில், இன்று ஒரு ஏதேச்சதிகாரமாக மாறிவரும் அரசாங்கத்திற்கெதிரான போராட்டங்களில் பயன்படுத்த வேண்டும்.

இறுதியாக நாம் நடைமுறைகளில் சுயநிர்வாகத்தை ஊக்குவிக்க வேண்டும்.; வெவ்வேறு கருத்துப் போக்குள்ள அமைப்புகளை ஒன்று திரட்ட வேண்டும். தொழிற்சங்கங்கள், நுகர்வோர் சங்கங்கள், சூழல்பாதுகாப்பு அமைப்புகள், இளைஞர் அமைப்புகள் ஆகியவற்றைப் பொருளாதார சமூக நடவடிக்கைகளுக்குள் கொண்டு வரவேண்டும். நாம் மிக விரைவில் மாற்றுப் பொருளாதாரம் பற்றிய ஒரு வட்ட மேசை மகாநாடு ஒன்றை நடத்த இருக்கின்றோம். இதில் நுகர்வோர்கள், தொழிலாளர் கூட்டுறவுகளில் உள்ளவர்கள், தொழிற்சங்கத்திலுள்ளவர்கள் எல்லோரும் பங்கு

www.tamilarangam.net

கொள்ளுகிறார்கள். இடதுசாரிகளின் மகாநாடு நடைபெறும் காலத்திலேயே இந்த மகாநாட்டையும் கூட்டும் நோக்கம் எமக்குள்ளது. இது உண்மையான ஒரு முன்னேற்றமாக இருக்குமெனக் கருதுகிறேன்.

**வடிம் டாமியர்** : சகலதையும் உள்ளடக்கும் கோட்பாடுகளை உருவாக்குவதிலும் காட்டிலும் வெகுஜனங்களை ஒன்றிணைக்கக் கூடிய நடவடிக்கைகளை உருவாக்குவதுதான் இன்றைய முக்கிய தேவையென நான் கருதுகிறேன். விவாதங்களும், அரசியல் தந்திரோபாயங்களும் இந்த அரசின் போக்கை மாற்றுவதற்குப் பயன்படாது. அடிமட்டத்திலிருந்து உருவாகும் வெகுஜன நடவடிக்கைகளினாலேயே இது சாத்தியமாகும். - தேர்தல் உடன்படிக்கைகள் என்ற நிலையிலிருந்து மேலே சென்று - அடிமட்டத்திலிருந்து உருவாகும் வெகுஜன நடவடிக்கைகளினாலேயே இது சாத்தியமாகும்.

# முற்றுகை



(11ம் பக்கத் தொடர்ச்சி)

"இனிமேதான் யோசிக்கணும்"

"ஓங்க அப்பா என்ன சொல்றாரு?"

"அவரு இங்கேயே வரச்சொல்றாரு"

"அதாண்டி ஞாயம்! செட்டுப் பயலுகளாகச் சேர்ந்துக்கிட்டு தேன் எடுக்கப் போவிகளே அந்த பம்பரைக் கூட்டை பார்க்க இல்லையா? ஒரு ஈயிக்கி ஒண்ணுன்னாலும் எல்லாம் சேர்ந்து என்னமா துடிச்சுப்போகுது! என்னமா வெரட்டி அடிக்குது! நாமளும் அப்படித்தான் இருக்கணும் "இங்கே தான் வேலை கிடைக்க மாட்டேங்குது, பேருபதிய மாட்டேங்கிறான்"

"நாம சண்டை போடுறது பத்தல்லே" மூவரும் சிரித்தனர்.

சரசு மூவருக்கும் தேநீரைக் கொண்டுவந்து தன் அண்ணனிடம் கொடுத்தான். வடிவேல் கங்காணியார் உற்சாகமாக "ஆத்தாடி பொண்ணு வருதுடா புதுப்பொண்ணு வருதுடா"என்று கிண்டல் செய்தார்.

அந்தக் கொழும்புப் பையன் புன்சிரிப்போடு தலையைக் குனிந்துகொண்டான்.

மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் அறிக்கை(9)யிலிருந்து.

## புதியவரலாற்றை உருவாக்க ........

இந்த(இயக்க) உறுப்பினர்களுடன் பேசும் போது அவர்களைச் சூழ்ந்திருக்கும் வெறுமையும் அவர்கள் கொண்ட விரக்தியும் தெரிய வரும். தங்கள் நாட்கள் எண்ணப்படுகின்றன என்று அவர்களுக்குத் தெரியும்..... தங்கள் சமூகத்திற்கு நிறையச் செய்ய முடியும் என்று போராட வந்ததாக அவர்கள் நம்புகிறார்கள். அவர்கள் எல்லாவற்றையும் பற்றியே கோபம் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மக்கள் பற்றி கடும் வெறுப்புற்றிருக்கிறார்கள். ஆனால் தப்பியோட வழியில்லை. கொழும்பில் வாழ்கின்ற தலைவர்கள் பகுத்தறிவு மிக்க அறிக்கைகளை வெளியிடுவார்கள் என்பது உண்மை. ஆனால் இராணுவத்தால் வெறுக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட தங்கள் உறுப்பினர்கள் பற்றி அவர்களின் தலைவர்கள் அக்கறை கொள்வார்களோ என்பது சந்தேகமே. கௌரவத்தை இழந்து அதிகாரம் எதுவும் இல்லாத நிலையில் அவர்கள் வெறும் சடங்களாகவே வாழ வைத்திருக்கிறது.

தாங்கள் ஜனநாயக வழிக்குத் திரும்பியுள்ளதாகக் கூறிக் கொள்ளும் இந்த அமைப்புகள் தங்கள் இராணுவப் பங்களிப்பு பற்றியும் தங்களின் உறுப்பினர்கள் பற்றியும் தங்களுக்கு மிகவும் சுமையான இராணுவ அமைப்பை கலைப்பது பற்றியும் சிந்திக்க வேண்டிய நேரம் வந்து விட்டது. தங்கள் கடந்த காலத்தை பரிசீலித்து அதிலிருந்து வெளிவர முடியாவிட்டால் எங்கள் சமூகம் அனுபவித்த துயரங்களின் பின் வரலாறு இவர்களை மன்னிக்காது.

சமூகத்தில் இயங்க வழியில்லாமல் இருக்கும் பிரிவே இந்த அழிவின் அரசியல் கலாசாரத்தில் அகப்பட்டுக் கொண்டது என்பது வேதனைக்குரிய உண்மை. தங்கள் ஏழ்மைப் பொறியிலிருந்து தப்ப இவர்களின் அரசியல் எந்த விதத்திலும் உதவப் போவதில்லை. இந்த அரசியல் வெறும் கனவுகளை வளர்த்து,

(30ம் பக்கம் பார்க்க)

www.tamilarangam.net

# ஜேர்மனி மாறித்தான் வருகிறதோ?

- வாசுதேவன்

கிழக்கு,மேற்கு ஜேர்மனிகளின் இணைவும் அதைத் தொடர்ந்து ஒன்றுபட்ட ஜேர்மனியின் நடவடிக்கைகளும் உலக அரங்கில் பலத்த சலசலப்பை ஏற்படுத்தி விடுகின்றன. திரைமறைவில் கலந்துரையாடி இணக்கம் கண்டு கொள்வதற்கு பதிலாக ஜேர்மனியும்,அதன் பழைய கூட்டாளிகளும் ஆங்காங்கே பொதுபடையாகவே கண்டனங்களை முன்வைக்கின்றார்கள். இந்த அளவுக்கு அப்படி என்ன தான் நடக்கிறது, என்பதைப் பற்றிய சில விபரங்களை இக்கட்டுரையில் பார்க்கலாம்.

1945இல் இரண்டாவது உலக யுத்தம் முடிவுக்கு வந்தது. இதைத் தொடர்ந்து ஜேர்மனி துண்டாடப்பட்டது. 1945-1989 காலப்பகுதியில் மேற்கு ஜேர்மனியின் வெளிநாட்டுக் கொள்கைகள் அதன் கூட்டாளி நாடுகளான அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கைகளைத் தழுவியே நடத்திச் செல்லப்பட்டது. இன்று நிலமையில் பெரிய மாற்றம் ஏற்பட்டு வருகின்றது.

ஜேர்மனியின் இணைவையொட்டிய நடவடிக்கைகள் ஜேர்மனியை ஐரோப்பிய நாடுகளில் முதன்மைப்படுத்தி வைத்துள்ளது. ஏறத்தாழ 80 மில்லியன் மக்களை கொண்டுள்ள புதிய ஜேர்மனியானது ஐரோப்பிய நாடுகள் மத்தியில் மிகப்பலம் பொருந்திய பொருளாதார நாடாக கணிக்கப்படுகின்றது. 12 ஐரோப்பிய நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய கூட்டமைப்பு (EC) நாடுகளின் தலைவனாக தம்மைத்தாமே இவர்கள் நியமித்துக் கொண்டு விட்டார்களோ என்று பிரித்தானியாவும், பிரான்சும் அஞ்சுவதாகவே தெரிகின்றது.

"ஐரோப்பாவை முழுமையாக ஆக்கிரமிக்கும் நோக்கத்தோடு ஐரோப்பிய கூட்டமைப்பை ஜேர்மனி பயன்படுத்துகின்றது" என இங்கிலாந்தின் முன்னாள் தொழிற்துறை அமைச்சர் Nicolas Ridley குற்றம் சாட்டினர். மார்கிரட் தட்சரின் முழுமையான ஆசீர்வாதத்துடனேயே Nicolas Ridley செயற்பட்டதாக பொதுவாக கூறப்படுகின்றது. தனது பிரதமர் பதவியை விட்டுவிலகிய பின்னரும் கூட மார்கிரட் தட்சரினதும், அவர் சார்ந்த குழுவினயிடமும் ஜேர்மனியின் போக்குத் தொடர்பாக பெரும் பதட்டம் நிலவி வருவதை இன்னும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஆனால் ஜேர்மனியின் அதிபர் Helmut Kohl இப்படிக் குறிப்பிடுகிறர் "நாம் ஐரோப்பாவுடன் இணைந்து செயற்படும் ஜேரர்மனியையே விரும்புகிறோம். ஒரு ஜேர்மனிய ஐரோப்பாவை அல்ல". இருந்த போதிலும் சந்தேகங்கள் வலுத்துக் கொண்டே செல்கின்றன. ஆங்கிலம்,பிரஞ்சு மொழிகளுடன் கூடவே ஜேர்மன் மொழியையும் ஐரோப்பாவின் உத்தியோக மொழியாக பாவிக்கும் வகையிலான மொழி அந்தஸ்தை ஜேர்மனி கோரி நிற்கின்றது. இது அதன் கூட்டாளிகளை எரிச்சலடைய வைத்துள்ளது. அநேகமாக 01.01.1995 இல் ஐரோப்பிய கூட்டமைப்புடன் இணைந்து கொள்ளும் ஆஸ்திரியா, சுவிற்சலாந்து நாடுகளிலும் ஜேர்மன் மொழியே பேசப்பட்டு வருகின்ற காரணங்த்தால் ஜேர்மனியின் கோரிக்கைக்கான காரணமும் வலுப் பெற்றுள்ளதை இங்கு நாம் கவனிக்க வேண்டும்.

ஜேர்மனியின் இணைவுக்கு முன்னர் ஐரோப்பிய பாராளுமன்றத்தில் மேற்கு ஜேர்மனி 81 பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டிருந்தது. கிழக்கு ஜேர்மனி இணைந்து கொண்டதை காரணம் காட்டி புதிய ஜேர்மனி தனது பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 99 ஆக அதிகாரிக்கும் படி இன்று கோரி நிற்கின்றது.

அணு ஆயுத தயாரிப்பிலிருந்து ஜேர்மனி தடுத்து வைக்கப்பட்டிருந்தாலும் பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளில் நிலை கொண்டுள்ள அணு ஆயுதங்களை எவ்வாறு, எப்போது பயன்படுத்துவது என்பது பற்றிய கலந்துரையாடலில் தன்னையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கோரியுள்ளது.

இதனுடன் கூடவே ஐ.நா.பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்தவராக தனக்கும் இடம் தர வேண்டும் என வேண்டி நிற்பதன் மூலம் பிரான்ஸ், பிரிட்டனது எரிச்சலை மேலும் கூட்டி வைத்துள்ளது ஜேர்மனி.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்த வரை ஜேர்மனி கடைப்பிடிக்கும் உத்தியே தனியாகவுள்ளதாக அரசியல் அவதானியான Kobylka கருத்து தெரிவித்துளார். துருப்புகளையும் துப்பாக்கியையும் கொண்டு இந்த தடவை கிழக்கு ஐரோப்பாவை ஜேர்மனி ஆளுமை கொள்ளவில்லை. மிகவும் வலிமை கொண்ட Deutsch Mark இன் மூலம் கிழக்கு ஐரோப்பாவை ஆளுமை கொள்கிறது என்பதே அவரது கணிப்பு. கிழக்கு ஐரோப்பாவிற்கு ஜேர்மனி கடனுதவிகளை அதிகரித்திருந்தாலும், இக்கடனுதவியின்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெரும் பகுதி ஜேர்மனிய தொழிற்சாலைகளை மற்றைய நாடுகளில் உருவாக்கவும், சந்தைபடுத்தவுமே பயன்படுவதாக இவர் கூறுகிறார்.

மறு புறத்தில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் முன்னாள் சோவியத் யூனியனுக்கும் கடனுதவி என்று வரும் போது ஜேர்மனியை முன்னுக்கு தள்ளி தாங்கள் பின்னால் நின்று கொள்ளும் EC நாடுகளின் போக்கை குறிப்பிடும் ஜேர்மனிய அதிபர் Helmut Kohl, அரசியல் ரீதியான முடிவுகளை எடுப்பதில் மட்டும் மற்றைய நாடுகளுக்கு பின்னே நிற்க முடியாது என கூறுகிறார்.

உண்மையாக இருக்கலாம் ! ஆனால் முன்னாள் யூகோஸ்லாவியாவில் பிரிந்து செல்லும் உரிமை கோரி நின்ற Coratio வை அவசர அவசரமாக அங்கிகரித்ததன் மூலம் ஜேர்மனி மற்றைய EC நாடுகளை சங்கடத்தில் மாட்டி விட்டது, அந்த நாடுகளுக்கு ஒரு கசப்பான உண்மையாகும். EC யில் அங்கம் வகிக்கும் மற்றைய நாடுகள் பின்னர் ஜேர்மனியின் முடிவை ஏற்றுக் கொள்ள வேண்டியேற்பட்டது.

முன்னைய காலங்களில் சர்வதேச சிக்கல்கள் ஏற்பட்ட சமயங்களில் ஜேர்மனி இவ்வாறாக நடந்திருக்க மாட்டாது. அமெரிக்காவையும், பிரித்தானியாவையும், பிரான்ஸையும் முன்னே விட்டு தான் திரைமறைவில் ராஜதந்திர முயற்சிகளை மேற்கொண்டிருக்கும். இன்று ஜேர்மனியின் போக்கில் பெரிய மாற்றம் ஏற்பட்டிருப்பது பல நாடுகளால் (குறிப்பாக பிரான்ஸ், பிரித்தானியா ) வியப்புடன் பார்க்கப்படுகின்றது.

துருக்கி நாட்டின் தலைவர் Turgut Ozal இவ்வாறு குறிப்பிடுகிறார். "ஜேர்மனியின் இணைவுக்குப் பின்னர் அதனிடத்தில் ஏராளமான மாற்றம் தென்படுகிறது. அவர்கள் எல்லா இடங்களிலும் தலையிடுகிறார்கள். எல்லோரிடமும் பொருதுகிறார்கள், தாங்கள் பெரிய சக்தி என்று நிருபிக்க முயற்சிக்கிறார்கள். கடந்த காலத்தில் ஹிட்லரின் ஜேர்மனியும் இவ்வாறே நடந்து கொண்டது"

ஜேர்மனி மாமித்தான் வருகிறதோ !!

# பிரேமதாசா - விஜயவீர இரகசிய ஒப்பந்தம் ?



பிரேமதாசாவின் அரசாங்கத்தினால் கைது செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட ரோகண விஜயவீரவின் மனைவியும் பிள்ளைகளும் அரசாங்க இராணுவத்தின் பொறுப்பிலேயே வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் பிள்ளைகளின் படிப்பும் கவனிக்கப்படுகிறதென்றும் செய்திகள் வெளி வரும் பொழுது, "ஆகா, ஜனாதிபதி எவ்வளவு கண்ணியவான். அவரின் கருணை உள்ளம் எவ்வளவு விலாசமானது. எதிரியின் குடும்பத்தையே இப்படிக் கவனிக்கிறாரே" என்று 'பாராட்டத்தான்' தோன்றியது. ஆனால் முன்நாள்பிரதிபோலிஸ் மாஅதிபர் பிரேமதாசஉடுகம்பல சமீபத்தில் வெளியிட்டிருக்கும் செய்தி ஜனாதிபதியின் கபட நோக்கத்தை வெளிக் கொண்டு வந்திருக்கிறது!

கடந்த ஜனாதிபதி தேர்தலிலும், பொதுத்தேர்தலிலும் ஐக்கிய தேசியக்கட்சி பதவிக்கு வருவதற்காக பிரேமதாசா விஜயவீரவுடன் செய்து கொண்ட இரகசிய ஒப்பந்தத்தின் சகல விபரங்களும் விஜயவீரவின் மனைவிக்குத் தெரியும் என்றும் அவை வெளிவராமல் பாதுகாப்பதற்கே விஜயவீரவின் மனைவியும் பிள்ளைகளும் தொடர்ந்தும் இராணுவப்பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாகவும் உடுகம்பொல கூறியுள்ளார்!

தான் பதவிக்கு வருவதற்காக இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்ட ஒருவரையே கைது செய்து அதிகாலையில் கொல்வ் மைதானத்தில் வைத்துச்சுட்டுக் கொலைசெய்து அருகிலுள்ள கனத்தையில் உடனேயே எரித்துச்சாம்பராக்கிய ஒருவருடன் ஒட்டி உறவாடிக் கொண்டிருப்பவர்களும், இரகசியப் பேச்சுக்கள் நடத்துபவர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய விடயம் இது"!

- முகிலன்

www.tamilarangam.net

# ஆயுதங்கள் மேல் காதல் கொண்ட மனநோயாளிகள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

குருநகர் கடற்தொழிலாளருக்கு தொழிற்சங்கம் ஒன்று அமைப்பது சம்பந்தமாக E.P.R.L.F. இயகத்துடன் தொழிற்சங்க தொடர்புகளை மேற்கொண்டு வந்த கடற்தொழிலாளி ஒருவரும் சிறையில் வாடுகிறார். இவர் கொஞ்சம் வசதி படைத்தவர். இவரின் சொத்துக்கள் அனைத்தும் புலிகளினால் பறிமுதல் செய்யப்பட்டு விட்டது. E.P.R.L.F . இயக்கத்துடன் தொர்பு வைத்திருந்ததாகவும், தொழிற்சங்கம் அமைக்க முயன்றதாகவும் மேற்படி நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியின் பிரதேச முகாமையாளர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவர் இந்திய உளவுப் பிரிவான "றோ" வை சேர்ந்தவர் என குற்றஞ்சாட்டப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் புலிகளினால் சீர்குலைக்கப்பட்ட வங்கிச் சேவைகளை சீராக செயல்பட வைப்பதற்காக இந்திய அமைதிப்படை உயர் அதிகாரிகளை அடிக்கடி சந்தித்து வந்ததே இவர் செய்த குற்றமாகும்.

வேலணை சந்தியில் சிறு தையற்கடை வைத்திடுந்த இஸ்லாமிய சகோதரர் ஒருவரும் சிறையிலடைபட்டிருந்தார். இவரின் கடை அமைதிப்படை E.P.R.L.F . முகாம்கள் அமைந்திருந்த பகுதியிலேயே இருந்தது. அவர்களின் தையல் வேலைகளை இவர் செய்து வந்திருக்கின்றார். E.P.R.L.F. .விற்கு சீருடை தைத்துக் கொடுத்ததாகவும் தகவல்கள் கொடுப்பதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்.

யாழ் போதனா வைத்திய சாலையில் சவக்கிடங்கில் வேலை செய்து வந்த ஆறு சிற்றூழியர்களை புலிகள் கைது செய்திருந்தார்கள். இந்திய அமைதிப்படையினால் கொல்லப்படும் புலிகளின் பிணங்களை வைத்தியசாலைச் சவக்கிடங்கில் வைத்திருக்கும் போது அவற்றைத் தாம் கடத்திச் செல்வதற்கு ஒத்துழைக்காத காரணத்துக்காக மேற்படி அறுவரும் கைது செய்யப்பட்டார்கள்.

வேலணை காட்டுப் பகுதியில் கிராம அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டு வந்த நாதன் என்பவர் கிராம அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல்களை E.P.R.L.F. இயக்கமேற்படி பகுதி அமைப்பாளர்களுடன் இணைந்து நடத்தியிருக்கிறார். இக்கலந்துரையாடலகளின் போது புகைப்படம் எடுக்கப்பட்டது. அதை அத்தாட்சிப் படுத்தி நீ E.P.R.L.F .ஆதரவாளன். பல புலிகளைக் காட்டிக் கொடுத்தாய் என குற்றஞ்சாட்டப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளார்.

புலிகளினால் கொலை செய்யப்பட்ட யாழ்ப்பாண முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின், உதவியாளர் நெல்லிநாதன் வயது சுமார் 65, பருத்த சரீரம் கொண்ட இவர் கடுமையான நோயாளியும் கூட. யாழ் மாவட்ட E.P.R.L.F . நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உதவியாளராக இருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். இவர் மூலம் பல தகவல்களைப்பெறமுடியும் என நம்பியிருந்தனர்.

வடக்கு கிழக்கு மாகாண அரசின் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் அவர்கள் பதவியேற்று யாழ் நகருக்கு வந்த போதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் அவருக்கு மாலை அணிவித்ததற்காக ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார். மேலே கூறப்பட்டவை ஒரு சில சம்பவங்களே ஆனால் வெறும் ஐயப்பாட்டிலும், கோபதாபங்களிலும் கூட பலர் கைது செய்யப்பட்டிருந்தார்கள்.

இப்படியான குற்றச் சாட்டுக்களின் பேரில் 3000க்கு மேற்பட்ட அப்பாவிப் பொது மக்கள் வடமாகாணம் முழுவதும் கைது செய்,ப்பட்டார்கள். பிள்ளை தமக்கெதிரான இயக்கத்திலிருந்தால் தந்தை கைது செய்யப்படுவார். தந்தை இல்லாவிடில் தாய் கைதாகி பெண்களுக்கான சிறையிலடைக்கப்படுவார்.

E.P.R.L.F, E.N.D.L.F., T.E.L.O., E.R.O.S., P.L.O.T. ஆகிய இயக்க உறுப்பினர் சிலரும் கைதாகி சிறையிலிருந்தனர். சாவகச்சேரிப் பகுதியில் மூன்று பெரிய சிறை முகாம்கள் அச்சமயத்தில் இருந்ததாக அறிந்தேன். நான் இருந்த சாள்ஸ் சிறைமுகாம், பொஸ்கோ சிறை முகாம், பெண்களுக்கான தனிசிறை முகாம். இப்பெண்கள் சிறையில் மாற்று இயக்க உறுப்பினர்களின் தாய்மார், சகோதரிகள், மனைவிமார், சிறு பிள்ளைகள் ஆகியோர் அடைக்கப்பட்டிருந்தனர்.

சாள்ஸ் முகாமில் நான் இருந்த போது பொறுப்பாளர் சாள்ஸ் பல தடவை என்னை அடித்தார். அவர் ஒரு மனோவியாதி பிடித்தவர் போன்றோ அல்லது வெறி பிடித்நவர் போன்றோ தான் செயல்படுவார். யாராவது கைதியைப் பிடித்து அடித்துக் கொண்டிருப்பது தான் அவரின் வேலை. தூஷண வார்த்தைகளைத் தவிர அவருக்கு வேறு பேச்சே தெரியாது. பத்து அடி நீளம் பன்னிரண்டு அடி அகலமான சிறிய அறை ஒன்றுக்குள் இருநூறு கைதிகளை வைத்து சுமார் பத்து மணித்தியாலங்கள் அடைத்துவைப்பார். ஒவ்வொரு நாளும் பத்து பத்து கைதிகளைத் தெரிந்தெடுத்து மாறுகால் மாறுகையை ஒன்றாகப் பிணைத்து விலங்கு பூட்டுவார். அதாவது வலது காலுடன் இடது கையைப் பிணைந்து விலங்கு பூட்டுவார். அப்படிவிலங்கிடப்பட்ட கைதிகள் நடந்து திரிய விடப்படுவார்கள். அவர்கள் பெரிதும் சிரமப்பட்டு நடந்து திரிவதைப்பார்த்து சிரித்து மகிழ்வார். கைதிகளை அடித்துத் துன்புறுத்திக் கொண்டு சிரித்து கேலி பண்ணுவார். "டேய் பு. மக்களே உங்கள் அம்மாமாரை இந்திய ஆமிமாருக்கு விட்டனீங்களாடா?" எனக் கேட்டு அடிப்பார். ஒரு நாளைக்கு பத்துப் பேருக்காவது மண்டை உடைக்காவிட்டால் தனக்குத் தூக்கம் வராது என கூறி கைதிகளின் மண்டையை ரீப்பர் சிலாகையால் அடித்து

www.tamilarangam.net

மண்டையை உடைப்பார் . இப்படியான வெறிபிடித்த பொறுப்பாளர் ஒருவரின் கீழ் தான் சாவகச் சேரியில் நான் கைதியாக இருந்தேன்.

ஒரு நாள் எல்லாக் கைதிகளும் வரிசையாக நிறுத்தப்பட்டோம். சிறிது நேரத்தில் விசாரணைக்குப் பொறுப்பாளராக இருந்த சலீம் எனும் புலி ஒருவர் தனது மெய்க்காப்பாளர்கள் சகிதம் வந்து எம்மைப் பார்வையிட்டார். "உங்களைச் சந்திக்க E.P.R.L.F.. பிரமுகர் ஒருவர் வருகிறார். அவர் சொல்வதுபோல் நீங்கள் நடந்துக் கொண்டால் உங்களுக்கும் நல்லது. எமக்கும் வேலைகள் எளிதாக இருக்கும்" என்றார்.

முகுந்தன் என்ற அந்த E.P.R.L.F .உறுப்பினர் கையிலும், காலிலும் விலங்கிடப்பட்ட நிலையில் ஆயுதம் தாங்கிய புலிகள் காவலாக வரஅழைத்து வரப்பட்டார். அவர் பலமாகத் தாக்கப்பட்டிருந்ததுடன் மூளைச்சலவை செய்யப்பட்டிருந்தார். அவர் சகல கைதிகளுக்கும் முன் நிறுத்தப்பட்டு சொற்பொழிவாற்ற விடப்பட்டார்.

தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு இனி வேறு இயக்கங்கள் எதுவும் இயங்க முடியாது எனவே புலிகளுடன் ஒத்துழைக்கும்படியும் அப்போதுதான் உங்களுக்கு விடுதலை கிடைக்கும் எனவும் சொன்னார். ஆயுதங்கள் இருந்தால் ஒப்படைக்கும்படியும், ஆயுதங்கள் புதைத்து வைத்திருந்த இடங்கள் தெரிந்தால் காட்டிக் கொடுக்கும்படியும் கூறினார். இவரின் பேச்சுக்களில் புலிகளின் மிரட்டல்களுக்காகத்தான் செயற்ப்படுகிறார் என்பதை சொல்லாமல் சொன்னார். அதன் பின் இயக்கங்களில் முக்கியப்பொறுப்புக்களில் இருந்தவர்களை அடையாளம் காட்டும்படி ஒரு அடையாள அணிவகுப்பு நடைபெற்றது. முகுந்தன் தான் கைதிகளை அடையாளம் காட்டினார். தாங்கள் எதிர்ப்பார்த்த அளவுக்கு கைதிகளை அடையாளம் காட்டவில்லை எனக் கருதிய புலிப்பொறுப்பாளர் சலீம் முகுந்தனை சகல கைதிகளுக்கும் முன்பாக வைத்து பொல்லினால் தாக்கினார். அந்தப் பொல்லு முறிந்ததும் அருகிலிருந்த கதிரையினால்தாக்கி அடித்தார். முகுந்தனின் தலையிலும், முகத்திலும் காயம் ஏற்பட்டு ரத்தம் வழிந்தது. அதன் பின் முகுந்தன் பல கைதிகளை அடையாலம் காட்டினார். அதில் அடையாளம் காட்டப்பட்டவர்கள் தனியாக அடைக்கப்பட்டார்கள். முகுந்தன் எங்கு கொண்டு செல்லப்பட்டாரோ தெரியாது.

சிறையில் இருக்கும் போது எமக்கு வெளி உலகில் என்ன நடக்கிறதென்பதே தெரியாது. நாள் எதுவுமே தெரியாது.

இன்று சிவராத்திரி எல்லாக் கைதிகளும் நித்திரை கொள்ளாமல் இருக்க வேண்டுமென பணிக்கப்பட்டனர். இரவானதும் கைதிகள் எல்லோரும் கணக்கெடுக்கப்பட்டனர். பின்னர் புலிகளின் இயக்கப் பாடல்களை ஒலிபரப்பினார்கள் அதன் பின் ஒவ்வொரு கைதிகளாக கூப்பிட்டு சினிமாப் பாடல்களைப் பாடும்படி கேட்டார்கள். பாடமுடியாதவர்களையும் வெட்கப்பட்டவர்களையும் அன்று இரவு முழுவதும் முட்டுக்காலில் இருத்தினார்கள்.

விரைவில் உங்களை யெல்லாம் விடுதலை செய்யப் போகிறோம் என அங்கு காவலிற்கு நிற்கும் புலிகள் கைதிகள் மத்தியில் அடிக்கடி கூறிவந்தார்கள். ஒரு நாள் இரவு இருநூறு கைதிகளின் பெயர்கள் வாசிக்கப்பட்டது. உங்களை விடுதலை செய்யப்போகிறோம். அதனால் யாழ் நகரத்திற்கு கொண்டு செல்ல வேண்டுமென கூறி இருவரிருவராக கால்களை சங்கிலியால் பிணைத்து அழைத்துச் சென்றார்கள். சிறிது நேரத்தில் வெளியில் கனரக வாகனங்கள் புறப்பட்டுச் செல்லும் சத்தம் கேட்டது. மறு நாளும், அதற்கு மறுநாளும் இவ்விதமாக மொத்தம் அறுநூறு பேர் விடுதலை என்ற பெயரில் கொண்டு செல்லப்பட்டார்கள். அடுத்த நாள் எனது பெயரும் வாசிக்கப்பட்டது. மனம் பெரிதும் மகிழ்வுற்றது. விடுதலை. அது எவ்வளவு இன்பமானது என்பது அந்த நேரத்தில் தான் தெரிந்தது.

என்னுடன் அறுபது வயது வயோதிபர் ஒருவர் பிணைக்கப்பட்டர். அவரின் வலது பக்கக் காலும், எனது இடதுபக்கக் காலும் சங்கிலியால் ஒன்றாக பிணைக்கப்பட்டு இரும்புப் பூட்டு போடப்பட்டது. அன்று இருவராக அழைத்துச் செல்லப்பட்டு முகாமின் முன் பக்கம் நிறுத்தப்பட்டிருந்த மூன்று லொறிகளில் ஏற்றப்பட்டோம். சுற்றிலும் மூடி அடைக்கப்பட்ட லொறி ஒவ்வொறிலும் சுமார் 65 கைதிகள் வீதம் ஏற்றப்பட்டோம். பின் கதவும் மூடப்பட்டது. காற்றுவர சிறு துவாரம் கூட இல்லாத நிலையில் பிரயாணம் ஆரம்பமானது. காற்று வர வழி இல்லாத படியினால் உள்ளே புழுக்கமாக இருந்தது. கைதிகள் மிக மிக நெருக்கமாக அடைக்கப்பட்டிருந்தால் ஒரே வியர்வையாக இருந்தது. தாகம் எடுத்தது சுமார் 45 நிமிடங்களின் பின் சற்று நேரம் வாகனம் தரித்து நின்று பின்னர் புறப்பட்டது இவ்விடம் ஆனையிறவு இராணுவத் தடை முகாம் என பின்னர் அறிந்து கொண்டோன். இக்காலத்தில் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் அந்நியோன்னியமான உறவு இருந்தது என்பதால் அவர்கள் என்மை ஆனையிறவு ஊடாக கொண்டு போவது சுலபமாக இருந்தது மேலும் இரு மணித்தியாலங்களின் பின் வாகனம் நிறுத்தப்பட்டு கதவு திறக்கப்பட்டது. கண்ணைப்பறிக்கும் வெளிச்சம் எம்மீது பட்டது. சற்றிவர மின்வெளிச்சம் பாச்சப்பட்டிருந்தது.பெரிய மைதானமொறில் இறக்கப்பட்டோம். அருகில் இரு பெரிய கட்டிடங்கள் இருந்தன. களஞ்சிய அறையாக பாவிக்கப்பட்டு கைவிடப்பட்டு கட்டிடமாக அவை எனக்கு தெரிந்தது. விடுதலை எனக் கூறி ஏன் இங்கு கொண்டு வந்திருக்கிறார்கள். என எண்ணினேன். பல புலிகள் அங்குமிங்கும்நடமாடினார்கள். ஆனால் கையில் ஆயுதம் எதுவும் இருக்கவில்லை. எம்மை ஒரு கட்டிடத்திற்குள் அழைத்துச் சென்றார்கள். அங்கு பலர் படுத்துக்கிடந்தார்கள். ஒரே துர்நாற்றம் வீசியது. எம்மையும் படுக்கும்படி கூறினார்கள். இருவர் இருவராக பிணைக்கப்பட்டிருந்ததால் பெரிய சிரமப்பட்டு இடம் தேடிபடுத்துக் கொண்டோம். என்னுடன் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்த பெரியவர் அழுது கொண்டிருந்தார். இவர் லொறியில் வரும் போது மூர்ச்சையுற்றார். இப் புதிய முகாமுக்கு வந்ததும் தண்ணீர் தெளித்து மயக்கம் தெரிவித்தோம். புதிய முகாம் . இச்சூழலைப் பார்க்க எனது மனதில் பயம் சூழ்ந்தது. மரண பயம் தூக்கமே வரவில்லை.

விடிந்தது நான் இருந்த கட்டிடத்ினுள் சுற்றும் முற்றும் பார்த்தேன். சுமார் ஆயிரத்து ஐநூறு பேர் வரை இருந்தார்கள். எம்முடன் சாவகச்சேரியில் கைதிகளாக இருந்து விடுதலை என அழைத்துச் செல்லப்பட்ட எல்லோரும் அங்கு இருந்தார்கள். எவருமே விடுதலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்யப்படவில்லை. பல புதிய கைதிகளும் இருந்தார்கள். பல கைதிகள் அரைக்காற்சட்டை அணிந்திருந்தார்கள். அநேகர் தலை மொட்டை அடிக்கப்பட்டும், கண்ணிமை வழிக்கப்பட்டும் காணப்பட்டார்கள். என்னையும் இப்படித்தான் செய்வார்களோ என்ற பயம் பிடித்துக் கொண்டது.

காலை 7 மணி போல சகல கைதிகளும் மைதானத்திற்கு அழைக்கப்பட்டு வரிசை வரிசையாக நிறுத்தப்பட்டோம். ஒவ்வொரு வரிசையாக மலசலம் அனுப்பப்பட்டோம். இருபது அடி நீளம், இரண்டரை அடி அகலம், பத்து அடி ஆழம் கொண்ட மூன்று மலக்குழிகள் வெட்டப்பட்டிருந்தன. அவற்றின் மேல் காட்டுத்தடிகள் போடப்பட்டிருந்தன. எவ்வித மறைப்பும் இல்லை. கைதிகள் மலம் கழிக்கும் போது காவலுக்கும் நிற்கும் புலிகள் அசிங்கமாக சொற்பதங்களால் கேலி செய்தார்கள். கைதிகளின் ஆண்குறிகளை அசிங்கமாக வர்ணணை செய்தார்கள். ஒரு சமயத்தில் நூறு கைதிகள் மலம் கழிக்க அனுமதிக்கப்படுவார்கள். இரண்டு நிமிடத்துக்குள் மலம் கழித்து விட்டு எழுந்து விட வேண்டும். தவறினால் அடி அல்லது கழுவுவதற்கு விட மாட்டார்கள். கழுவுவதற்கு பால்ரின் பேணி ஒன்றுக்குள் மட்டுமே நீர் எடுக்கலாம். ஒரு நாளைக்கு ஒரு முறைமட்டுமே மலம் கழிக்க அனுமதி தரப்படும். சுகயீனம் ஏற்பட்டால் அதாவது மலச்சிக்கல், வயிறோட்டம் என்றால் மேலும் ஒரு தடவை அனுமதிக்கப்படுவார்கள்.

மலங்கழித்த பின் மீண்டும் கட்டிடத்திற்குள் விடப்பட்டோம். காலை உணவு பத்து மணி போல வழங்கப்பட்டது. ஒரு கைதிக்கு அரை இறாத்தல் பாணும் ஒரு கோப்பை தேனீரும் தரப்பட்டது.

மாலை நாலு மணியாகியும் மதியச் சாப்பாடு தரப்படவில்லை. பசி யமக்கமாக இருந்தது. ஐந்து மணிபோல் சாப்பாடு வந்தது. சாப்பாடு தட்டுகள் சிறிதளவே இருந்தால் எனக்குசாப்பாடு கிடைக்கும் போது ஆறுமணியாகி விட்டது. சோறும் பருப்புக் கறியும் மட்டுமே வழங்கப்பட்டது. ஒரு தடவை தரும் சாப்பாடுதான். பசித்தாலும் மீண்டும் கேட்க முடியாது. ஒவ்வொரு நாளும் இதே சாப்பாடுதான். ஒரு நாளைக்கு இரண்டு நேர சாப்பாடு மட்டுமே வழங்கப்படும். அதுவும்அரைகுறையாகவே தரப்பட்டது.

எல்லாக் கைதிகளும் சாப்பிட்டு முடிந்ததும் கைதிகளை கணக்கெடுக்கும் வேலை ஆரம்பமாகியது. காவலுக்கு நின்ற ஒவ்வொரு புலியும் கணக்கெடுத்தார்கள். ஆளுக்காள் வேறு வேறு தொகைகளை சொன்னார்கள். முகாம் பொறுப்பாளர் தினேஸ் என்பவர்க்கு கோபம் வந்து விட்டது தனது தூஷண வார்த்தைகளால் ஏசிக்கொண்டு தானே கணக்கெடுக்க ஆரம்பித்தார். முகாமில் இருக்கும் கைதிகளின் தொகைக்கும் அவரின் கணக்கெடுப்புக்குமிடையே வேறுபாடுகள் வந்ததால் மீண்டும் மீண்டும் கணக்கெடுத்தார். இப்படியாக சுமார் மூன்று மணி நேரம் கணக்கெடுப்பு நடந்தது. முகாமில் இருந்த இரு கட்டிடங்களிலும்கிட்டத் தட்ட மூவாயிரம் கைதிகள் இருந்தனர். மூவாயிரம் கைதிகளை எண்ணிக்கணக்கெடுக்க மூளைகெட்ட புலிகளுக்கு மூன்று மணி நேரம் பிடித்தது. ஒவ்வொரு நாளும் இதே பல்லவி தான்.

அன்று இரவு படுக்கவிடும் போது இரவு மணி பதினொன்று. கைதிகள் அனைவரும் வெறுந்தரையில்தான் படுக்க வேண்டும். கைதிகளின் உடலில் மேற்சட்டையில்லை சிலருக்கு சாரமும் சிலருக்கு அரைக்காற்சட்டையும் தான். அநேக கைதிகள் பொக்குளிப்பான் வருத்தம் கொண்டிருந்தார்கள். அவர்கள் படுப்பதற்கு ஒவ்வொரு சாக்கு வழங்கப்பட்டது. பொக்குளிப்பான் வருத்தக்காரர் சாக்கில் படுப்பதால் உஷ்ணம் கூடி நோய் அதிகரிக்கச் செய்தது.

இரவு படுத்திருக்கும் போது நாம் இருந்த கட்டிடத்திற்குள் மேலும் கைதிகள் வந்து சேர்ந்தார்கள். சாவகச்சேரியில் எம்முடன் சிறையிருந்த மிகுதிக் கைதிகள் தான் அவர்கள் என அடையாளம் காணக்கூடியதாக இருந்தது.

மறுநாள் அதிகாலை மூன்று மணிக்கே தூக்கத்தால் எழுப்பப்பட்டோம். உடனே கைதிகளைக் கணக்கிடும் பணி



www.tamilarangam.net

ஆரம்பமாகியது. காலை ஆறு மணி வரை மீண்டும் மீண்டும் கணக்கெடுத்தார்கள். அதன் பிற்பாடு மலசலங்கழிப்பதற்கு அனுமதித்தார்கள். மைதானத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது முகாம் சுற்றாடலை நோட்டம் விட்டோன்.

பாழடைந்த அதாவது தற்போது பாவனையில் இல்லாத இரண்டு களஞ்சிய சாலைகளை மையமாகக்கொண்டு முகாம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. ஒரு களஞ்சிய அறை சுமார் 250 அடிநீளமும் கொண்டதாக விளங்கியது. இரு களஞ்சியங்களிலும் கைதிகள் வைக்கப்பட்டிருந்தனர். களஞ்சியங்களை சுற்றி 6 அல்லது 7 ஏக்கர் நிலத்தில் காடுகள் எல்லாம் அழிக்கப்பட்டு துப்பரவு செய்யப்பட்டு இருந்தது. முகாமை சுற்றி முட்கம்பி வேலி அடிக்கப்பட்டிருந்நது. அந்த முட்கம்பிவேலியிருந்து வெளிப்பக்கம் பன்னிரண்டு அடி தள்ளி மேலும் ஒரு முட்கம்பி வேலி சுற்றி வர அடைக்கப்பட்டிருந்தது. இந்த இரு முட்கம்பி வேலிகளுக்கிடையில் வளைய வடிவில் முட்கம்பி போடப்பட்டிருந்தது. அத்துடன் இரு வேலிகளுக்குமிடையில் மிதி வெடிகள் பரவலாகப் புதைக்கப்பட்டிருந்தது.

முட்கம்பி வேலிகளுக்கு அப்பால் அதாவது வெளிப்புறமாக தான் புலிகள் ஆயுதப்பாணிகளாக இரவு பகல் எந்நேரமும் காவலுக்கு இருந்தார்கள். சுமார் முன்னூறு பேர் கொண்ட தனி இராணுவ அணி ஒன்று காவலுக்காக நியமிக்கப்பட்டிருந்தது. முகாமுக்குள் எந்நேரமும் முப்பது புலிகள் ஆயுதம் இல்லாமல் காவலுக்கு நிற்பார்கள். முகாமுக்கு வெளியே உயரமாக எட்டு காப்பரண்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஒவ்வொன்றிலும் இவ்விரண்டு புலிகள் வீதம் காவலுக்கு நிற்பார்கள். ஒவ்வொரு காப்பரணிலும் பாரிய நவீன துப்பாக்கிகள் முகாமை நோக்கி குறிப்பார்த்தபடி நிறுத்தபட்டிருக்கும். அவற்றைவிட மேலும் பன்னிரண்டு காப்பரண்கள் முகாமைச் சுற்றிவர அமைக்கப்பட்டு இருந்தன. அவற்றிலும் ஒவ்வொன்றிலும் இவ்விரண்டு புலிகள் வீதம் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்தார்கள். அவர்களும் துப்பாக்கிகளை முகாமை நோக்கி குறிபார்த்த வண்ணம் வைத்திருந்தார்கள்.

முகாமில் இரு களஞ்சிய அறைகளில் இருக்கும் கைதிகள் மலசலம் கழித்தபின் கட்டிடத்துக்குள் அடைக்கப்படுவார்கள். அப்படி அடைக்கப்பட்ட பின் வேறு கைதிகள் மலசலம் கழிக்கச் செல்வதைப் பார்த்து நான் ஆச்சரியப்பட்டேன். இக்கைதிகள் எங்கு சிறைவைக்கப்பட்டிருக்கிறார்கள் என எண்ணினேன். சில நாட்களின் பின்னர்தான் அதற்கு விடை கிடைத்தது.

முகாம் அமைந்துள்ள மைதானத்தின் ஒரு பகுதிக்கு கைதிகள் எவரும் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. அங்கு பாரிய குழிகள் நிலத்தில் தோண்டப்பட்டு அவற்றிலும் பல கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். பங்கர் எனப்படும்அவற்றில் தனித்தனியாகவும், கூட்டமாகவும் கைதிகளைப் போட்டு வைத்திருந்தார்கள். தனி ஒரு கைதியை போடும் பங்கர் இரண்டுடரை அடி அகலமும், 5அடி நீளமும், 15 முதல் 20 அடிஆழமும் கொண்டதாக தோண்டப்பட்டிருந்தது. கயிற்றின் மூலம் கைதியை இறக்கி விட்டு கயிற்றை மேலே தூக்கி விடுவார்கள். பங்கர்மூடப்படுவதால் காறறு வசதியோ வெளிச்சமோ இருக்காது. தினமும் காலை வேளைகளில் மட்டும் மலம் கழிப்பதற்காக மேலே ஏற்றுவார்கள். சிறுநீர் கழிப்பதற்கு ஆளுக்கு ஒரு போத்தல் வழங்கப்பட்டிருக்கும். சாப்பாட்டு நேரத்துக்கு உணவும் தண்ணீரும் வழங்கப்படும்.

இப்படியான பங்கரில் விடப்படும் கைதி நாளாந்தம் படும் சித்திரவதை சொல்லிமாளாது. இரவில் பங்கருக்கு காவல் நிற்கும் புலிகள் மேலே நின்று பங்கருக்குள் இருக்கும் கைதியின்மேல் சிறுநீர் கழிப்பார்கள். தவளைகளைப் பிடித்து வந்து பங்கருக்குள் போடுவார்கள். கற்களால் எறிவார்கள், தண்ணீர் ஊற்றுவார்கள். தூங்குவதற்கு விடமாட்டார்கள். இவற்றுக்கெல்லாம்மேலாக வெங்குணாந்தி எனும் மலைப் பாம்பு வகையைச்சேர்ந்த பெரிய பாம்பு ஒன்றை பங்கருக்குள் போடுவார்கள். இரட்டில் என்ன ஏது என தெரியாத கைதி பெரும் கூச்சலிட்டு கத்துவார்கள். அவர் படும் கஷ்டத்தைப் பார்த்து மேலே நிற்கும் புலிகள் சிரித்து மகிழ்வார்கள். கொலைகாரப் புலிகள் எம் தமிழ்ச் சகோதரர் களுக்கு செய்யும் இம்சைகளைக் காணும் போது என் ரத்தம் கொதிக்கும்.

இப்படியான பங்கருக்குள் விடப்படும் கைதிகள் புலிகளைப் பொறுத்தவரை பெரும் குற்றம் செய்தவர்களாக கருதப்படுபவர்கள். இவ்வகை பங்கருக்குள் சுமார் 100 கைதிகள் வரை போடப்பட்டிருந்தனர். அவர்களின் குறிப்பிடத்தக்கவர்கள்.

இந்திய அமைதிப்படை இலங்கையில் இருந்தபோது யாழ் மாவாட்ட இணைப்பதிகாரியாக கச்சேரியில் இயங்கி வந்த முகுந்தன் என்பவர்.

மக்கள் வங்கியின் பிரந்திய முகாமையாளர் ஒருவர்

யாழ் மாவட்ட சபையின் முன்னால் உறுப்பினரும் நாடாளுமன்ற தேர்தலின் போது யாழ் மாவட்டத்தில் தமிழர் விடுதலை கூட்டணி சார்பில் போட்டியிட்டவருமான நடேசு என்பவர்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த முக்கிய தோழர் ஒருவர்.

ஈரோஸ் அமைப்பைச் சேரந்த யாழ் பிராந்திய முக்கிய உறுப்பினர்கள் மூவர்.

பணத்துக்காக கடத்தப் பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இஸ்லாமிய சகோதரர்கள் ஐவர்.

கைது செய்யப்பட்டவர்களில் E.P.R.L.F.. இயக்க உறுப்பினர்கள் என அடையாளம் காணப்பட்ட அனைவரும் தனித்தனி பங்கருக்குள் போட்டு அடைக்கப்பட்டனர். ஏனைய இயக்க உறுப்பினர்கள் என அடையாளம் காணப்பட்டவர்கள் கூட்டம் கூட்டமாக பெரிய பெரிய பங்கர்களில் போட்டு அடைக்கப்பட்டார்கள். பெரிய பங்கர் என்னும் போது முப்பது அடி நீளம் பன்னிரண்டடி அகலமும் 15 முதல் 20 அடி வரை ஆழமும் கொண்ட குழியாகும். இப்படியான பங்கர் ஐந்து வெட்டப்பட்டிருந்தது. ஒவ்வொரு பங்கருக்குள்ளும் முப்பது முப்பது கைதிகள் இறக்கப்பட்டிருந்தார்கள்.

நான் இக்காட்டுக்குள் அமைந்திருந்த முகாமுக்கு கொண்டு செல்லப்பட்ட இரண்டாம் நாள் கைதிகளின் கால்களுக்கு தனித்தனியாக விலங்குகள் போடப்பட்டது. அதாவது இரும்புச் சங்கிலியால் இரு கால்களும் பிணைக்கப்பட்டு மின்சார (Electric welding)ஒட்டு மூலம் ஒட்டப்பட்டது. ஒவ்வொரு கைதிக்கும் தனித்தனி இலக்கம் கொடுக்கப்பட்டது. கைதிகள் நூறு நூறு ஆட்களாக பிரிக்கப்பட்டன. A பிரிவில்நூறு

www.tamilarangam.net

கைதிகள் B பிரிவில் நூறு கைதிகள் என்ற ரீதியில் வகைப்படுத்தப்பட்டனர். சிறையில் எனது இலக்கம் J18ஆகும் அங்கிருந்த சகல கைதிகளுக்கும் தனித்தனியே விலங்கிடவும், இலக்கம் கொடுக்கவும் ஐந்து நாட்கள் சென்றது. இவ்வேலை எல்லாம் பூர்த்தியானதும், ஓர் இரவு முன்னர் நான் குறிப்பிட்ட விசாரணைப் பொறுப்பாளர் சலீம் என்பவர் சகல கைதிகளையும் மைதானத்தில் கூட்டி ஒரு பெரிய சொற் பொழி ஆற்றினார். அதன் சாரத்தை கீழே தருகிறேன்.

"இங்கிருக்கும் நீங்கள் எல்லோரும் தமிழீழ விடுதலைக்கு துரோகம் செய்ததாலும் விடுதலைப்புலிகளுக்கு எதிராக வேலை செய்ததாலும், சமூக விரோதிகளாக கருதப்பட்டதாலும் கைது செய்யப்பட்டு உள்ளீர்கள். உங்களில் எவனாவது நான் தமிழீழ விடுதலைக்கு துரோகம் செய்யவில்லை என கூற முடியுமா? எங்கள் தலைவர் உங்களுக்கெல்லாம் பொது மன்னிப்பு அளித்துள்ளார் ஆனால் நீங்கள் உண்மை சொன்னால் தான் உங்களுக்கு தலைவரின் பொது மன்னிப்புக் கிடைக்கும். டேய் .பு. மக்களே உங்களுக்கு எமது பலம் தெரியவில்லை. உலகின் மூன்றாவது பெரிய வல்லரசான இந்தியாவையே ஓட விரட்டிய எம்மை நீங்கள் சரியாக புரிந்து கொள்ளவில்லை. உலகத்தில் எந்த மூலைக்கு நீங்கள் ஓடினாலும் ஒளிந்தாலும் உங்களை சும்மா விட மாட்டோம். அமிர்தலிங்கத்திற்கு நடந்தது தெரியும்தானே. கொழும்பில் கைது செய்யப்பட்டு இங்கு கொண்டு வரப்பட்டபலரும் இங்கு கைதிகளாக இருக்கிறீர்கள். விசாரணையின் போது ஒளித்த ஆயுதங்களை காட்டித்தாருங்கள். உங்களிடமிருந்து பறித்த ஆயுதங்கள், இலங்கை அரசாங்கம் எமக்குத் தந்த ஆயுதங்கள் எல்லாம் எம்மிடம் போதிய அளவு இருக்கிறது. நூறு வருடத்திற்கு தொடர்ந்து யுத்தம் செய்வோம். இங்கு தண்ணீர் வசதி இல்லை எனவே குடிக்க மட்டும் தண்ணீர் தரப்படும். இப்போதைக்கு முகம் கழுவ தண்ணீர் தர முடியாத நிலை. உணவு மூன்று நேரம் தர முயல்கிறோம். ஆனால் சமைக்க நேரம் காணாத படியாலும் பரிமாறுவதில் உள்ள சிரமங்களாலும் உங்களுக்கு இரண்டு நேர உணவு மட்டும் தருவோம். மேலும் நீங்கள் யாராலும் புலிகளை சுட்டிருந்தாலும் உண்மை சொன்னால் உங்களை விடுதலை செய்வேன். எனக்கு தேவை உண்மை. உண்மை சொன்னால் உங்களுக்கு விடுதலை".

சலீம் பேசி முடித்ததும் கைதிகள் எல்லோரும் அவரவர் இடத்திற்கு அனுப்பப்பட்டோம். கைதிகள் வரிசையாக சென்று கொண்டு இருக்கும் போது ஒரு கைதி கழுத்தில் செப மாலை அணிந்திருந்ததைக் கண்ட சலீம் "டேய் வேசை மகனே அறடா செபமாலையை இங்கு நான் தானடா கடவுள் எனக்குத் தேவை உண்மை. செபமாலையாடா உனக்கு விடுதலை தரப்போகிறது. அம்மாமாரை, அக்காமாரை இந்தியன் ஆமிக்கு விட்ட உனக்கு எல்லாம் ஒரு செபமாலை" எனப்பேசினான்.

முகாம் பொறுப்பாளர் தினேஸ் என்பவருக்கு உதவியாளராக கேடி என்பவன் இருந்தான். அவன் மகா முரடன். படு முட்டாள். அரக்கனைப்போல் காட்சியளிப்பான் பள்ளி சென்று படித்திருப்பானோ தெரியாது. "டேய் பரதேசிகளே ஆயிரம் தண்டனை இருக்கிறது. அவ்வளவும் இப்போ செய்வீர்கள்" எனக்கூறி ஒவ்வொன்றாக செய்யச் சொல்லி பணிப்பான். எந்நேரமும் பெரிய பொல்லுடன் கைதிகளைச் சுற்றிச் சுற்றித் திரிவான். ஒவ்வொரு நாளும் கைதிகளுக்கு அடித்தே இரண்டு மூன்று பொல்லுகளை முறித்து விடுவான். ஒரு நாள் ஒரு இஸ்லாமிய கைதிக்கு அடித்த அடியில் அவருக்கு மலமே போய்விட்டது. கைதிகளை ஆயிரம் தடவை தோப்புக்கரணம் போடும்படி செய்வான். எந்நேரமும் கைதிகளை கையினால் வாயைப் பொத்திக் கொண்டு இருக்கும் படி சொல்வான். மோட்டார் சைக்கிளை கைதிள் இருக்கும் இடத்தில் ஓட்டி வந்த கைதிகளுடன் மோதுவான். கைதிகள் இருக்கும் களஞ்சிய அறையின் நிலத்தில் 2 அடி * 1 1/2 அடி சதுரங்களாக தீந்தையினால் கோடு கீறப்பட்டு ஒவ்வொரு சதுரத்திற்கும் ஒவ்வொரு இலக்கம் எழுதப்பட்டிருந்தது. அந்த சதுரத்திற்குள் ஒழுங்காக இருக்காத கைதிகள் கேடி என்னும் அந்த அரக்கனினால் பலமாக தாக்கப்படுவார்கள். ஒரு நாள் எழுந்தவுடன் முகாம் பரப்பரபடைந்தது. புலிகள் எல்லொரும் ஓடித்திரிந்தார்கள். சகல கைதிகளையும் அவரவர் இருக்க வேண்டிய இடத்தில் இருத்தினார்கள். முகாமில்ஊசி விழுந்தார் கேட்கக் கூடிய அளவுக்கு அமைதி நிலவியது. காலை உணவு தரும் நேரமும் தாண்டிவிட்டது. உணவு வழங்கப்படவில்லை. தலைவர் கைதிகளை பார்க்க வரப்போகிறார். அதனால் எல்லோரும் ஒழுங்காக இருங்கள் என புலிகள் கூறினார்கள். மதிய உணவு வழங்கும் நேரமும் வந்து விட்டது தலைவர் இன்னும் வரவில்லை. எல்லோருக்கும் பசி. மதிய உணவும் வழங்கப்படவில்லை. இரவு பத்து மணிக்கும் தலைவர் வரவில்லை. பின்னர் கைதிகளை கணக்கெடுத்து விட்டு படுக்க விட்டார்கள்.அன்று கைதிகளுக்கு ஒரு நேர உணவு கூட வழங்கப்படவில்லை.நேரம் இரவு பன்னிரண்டு மணியைத் தாண்டி விட்டது. சாவகச்சேரி முகாம் ஒன்றுக்கு பொறுப்பாளராக இருந்த பொஸ்கோ என்பவன் என்னை அழைத்து பேசிக் கொண்டிருந்தான். அந்த நேரம் ஆறு வாகனங்கள் வருவது தெரிந்தது. சாமான் வைத்திருந்த குடிசைக்குள் என்னை வைத்து பூட்டிவிட்டார்கள். ஓலைத் தட்டியில் துவாரத்தின் வழியாக வெளியே பார்த்தேன். வாகனங்கள் நிறுத்தப்பட்டு எல்லோரும் ஒரு உசார் நிலையில் இறங்கி தம்மை நிலைப்படுத்திக் கொண்டார்கள். புலிகளின் பிரதிக் தலைவர் மாத்தையா வாகனத்தில் இருந்து இறங்கினார். மாத்தையாவின் முன்னால் சலீம் கைகட்டி மரியாதையாக நின்றார். "விசாரணைகள் ஆரம்பமாகி விட்டதா? ஏன் எனக்கு ஒரு குறிப்பும் வரவில்லை? என மாத்தையா கேட்டார். தான் இரு நாட்கள் மன்னார் போய் வந்தபடியால் இன்னும் விசாரணை ஆரம்பிக்கவில்லை என சலீம் கூறினார். உடனே மாத்தையா "மன்னாருக்கு ஏனடா போனனி அவளோடு படுக்கவா போனனீ பத்து நாளைக்குள் விசாரணை எல்லாம் முடித்து அறிக்கை எனது கைக்கு வரவேண்டும் அல்லது உன்னைத் தொலைத்து விடுவேன்" என மற்ற புலிகளுக்கு முன் கோபமாக கெட்ட வார்த்தைகளால் திட்டினார்.

பின்னர் வாகனத்தில் ஏறி முட்கம்பிகளுக்கு வெளிப்புறமாக முகாமைச் சுற்றி வந்தார். சலீமைக் கூப்பிட்டு "அந்த வேசை மக்களைக் கொண்டு இன்னும் காடு வெட்டு" என சலீமுக்கு உத்தரவிட்டு விட்டு தனது பரிவாரங்களுடன் புறப்பட்டு போய் விட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாத்தையா வந்து போன மறுநாள் கைதிகளுக்கு விசாரணை ஆரம்பமாகியது. விசாரணைக்காக தனியான பந்தல் போடப்பட்டிருந்தது. விசாரணைப் பந்தல் ஏறத்தாள பதின்ஐந்து அடி அகலம் முப்பது அடிநீளம் கொண்டது. ஒரே சமயத்தில் முப்பது கைதிகளை விசாரணை செய்வார்கள். நாள் ஒன்றுக்கு அறுபது கைதிகள் வீதம் விசாரிக்கப்பட்டார்கள். விசாரணை மேற்கொள்ளும் புலிகள் எல்லோரும் சிறு வயதினர் 18 வயதிற்கு குறைவானவர்கள். இவர்களை மேர்ப்பார்வை செய்ய தீபன் என்ற புலியும் மஞ்சு என்ற புலியும் இருந்தார்கள். விசாரணையின் போது அடிப்பதற்காக முரட்டுத் தோற்றம் கொண்ட பத்துப் புலிகள் வயர், கம்பி, பொல்லு, பச்சை மட்டை ஆகியவற்றுடன் விசாரணைக் கொட்டடியில் நிற்பார்கள்.

இதற்குள் ஒரு நாள் புலிகளின் புலன் விசாரணைப் பிரிவுத் தலைவர் பொட்டம்மான் என்பவர் முகாமைப் பார்வையிட வந்தார். ஆனால் முகாமுக்குள் வரவில்லை. முட்கம்பி வேலிக்கு அப்பால் முகாமைச் சுற்றி பார்த்து விட்டு போய்விட்டார். இவர் வாரத்தில் இரு தடவை இவ்வித விஜயம் மேற்கொள்வது வழக்கம். இவர் வரும் நாட்களிலும் முகாம் உசார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும். இவரும் தன் பாதுகாப்பு பரிவாரங்களுடன் தான் வந்து போவார்.

புலிகளின் விசாரணை ஒரு ஒழுங்கு படுத்தப்பட்டதாக இருந்ததில்லை. ஒரு திட்டத்துடன் விசாரணையை ஆரம்பிப்பார்கள். பின் இடை நிறுத்துவார்கள். கைதிகளின் அறிக்கை ஊரில் இருந்து வரவேண்டும் என்பார்கள் ஊரில் இருந்து வரும் கடிதங்களை பெரிதாக எடுத்து அதை உண்மையாக்க குறிப்பிட்ட கைதியை சித்திரவதை செய்வார்கள். புலித்தலைவர் பொது மன்னிப்பு என அறிவித்தார் என்பார்கள் ஆனால் மன்னிப்பு என்றால் என்ன என புலிகள் எவருமே அறிந்து கொள்ளவில்லை. கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் தண்டணைக்கு உள்ளானார்கள். இங்கு வேடிக்கை என்னவென்றால் புலித்தலைவர் பொது மன்னிப்பு அளித்தது யாருக்கு? குற்றவாளிகளுக்குத் தான் மன்னிப்புத் தேவை, ஆனால் இங்கிருந்த கைதிகள் தமிழுக்கு எதிராக, தமிழருக்கு தமிழர் தம் விடுதலைக்கு எதிராக ஒரு குற்றமுமே செய்யவில்லை. புலிகளுக்கு எதிராக செயற்பட்டார்கள் என்பதே இவர்கள் செய்த குற்றம்.

கைதிகளுக்கு காலை உணவாக பாண் தரப்படும் என முன்னரே சொல்லி இருந்தேன் அல்லவா? அந்தப் பாண் கொண்டு வரப்படும் பெட்டிகளில் பேக்கரியின் பெயரும் துனக்காய் என்று எழுதப்பட்டதையும் பார்த்து இப்பகுதி துனக்காய்க்கு சமீபத்தில் இருக்கிறது என்பதை ஊகித்துக் கொண்டோன்.

முன்னாள் யாழ் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் உதவியாளர் நெல்லிநாதன் என்பவர் துணுக்காய் பகுதியில் அமைந்துள்ள இக்காட்டு முகாமில் ஒரு துணியும் இல்லாமல் நிர்வாணமாக வைக்கப்பட்டிருந்தார்.

யோசனையாலும் சித்திரவதைகளாலும் மண்டையில் அடிப்பதாலும் ஐந்து கைதிகளுக்கு மனநோய் பிடித்துக்கொண்டது. இவர்கள் பைத்தியமாக நடிப்பதாக சொல்லி மேலும் மேலும் அடிப்பார்கள். உணவு கொடுக்க மாட்டார்கள். முகாமில் ஒரு பகுதியில் இருந்த சகதிக்குள் பைத்தியம் பிடித்தவர்களை கட்டி விடுவார்கள்.



சில நாட்களின் பின் ஒரு நாள் அவர்களை எங்கேயோ அழைத்துச் சென்றார்கள். அழைத்துச் சென்ற சுமார் பதினைந்து நிமிடங்களின் பின் துப்பாக்கி வெடிக்கும் சத்தங்கள் கேட்டது. பைத்தியமாக அழைத்துச் செல்லப்பட்டவர்கள் முகாமுக்கு திரும்பவும் கொண்டு வரப்படவில்லை.

விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுபவர்கள் விசாரணை முடிந்து திரும்பி வரும் போது நடக்க முடியாமல் தான் வருவார்கள். சிலர் பெரிய இரத்தக்காயங்களுடன் தான் வருவார்கள். இவற்றையெல்லாம் பார்க்கும் போது எனக்குப் பயமாக இருந்தது. இது ஆரம்ப விசாரணைஎன்றும் மீண்டும் ஒரு விசாரணை இருக்குமெனவும் பேசிக் கொண்டார்கள்.

விசாரணை ஆரம்பமாகி பத்தாவது நாள் விசாரணைக்காக எனது இலக்கமும் வாசிக்கப்பட்டது.நண்பகல் பன்னிரண்டு மணிபோல் சுமார் பதினைந்து வயது மதிக்கத்தக்க புலியின் மேசையின் முன் நிலத்தில் இருத்தப்பட்டேன். கறுத்த துணியினால் எனது கண்களைக் கட்டினார்கள் விசாரணை ஆரம்பமாகியது. கேட்கப்பட்ட கேள்விகளுக்கு எதுவித தயக்கமும் இன்றி பதில் சொன்னேன்.ஆனால் எல்லாக் கைதிகளுக்கும் அப்படி பதில் அளிக்க முடியாத கேள்விகளாக அவை இருந்தன. உறவு முறைகள் உறவினரின் முகவரிகள் உறவினரின் பிறந்த திகதிகள் குடும்ப விபரங்கள் போன்ற ஞாபகத்தில் இல்லாத சாதாரண விடயங்கள் எல்லாம் கேட்கப்பட்டன. "ஏன் உன்னைப் பிடித்தார்கள்." எனக் கேட்கப்பட்டதும் தெரியாது என்றேன். முதுகுப் பக்கமாக அடி விழுந்தது. ஏன் அடித்தார்கள் என்றோ,யார் அடித்தார்கள் என்றோ தெரியவில்லை. துடித்துப்போனேன் கொலைகாரப்புலிகள் வயரினால் பல தடவைகள் அடித்தார்கள். நீ EP க்கு உளவு வேலை பார்க்கவில்லையா? எனக்கேட்டு பச்சைமட்டையினாலும் அடித்தார்கள். (தென்னை ஓலை மட்டை) உன்னைப் பற்றி ஊரில் இருந்து அறிக்கை பெறப்பட்டுள்ளது. உண்மையைச் சொல் வரதராஜ பெருமாளை அசோகா ஹோட்டலில் சந்தித்து என்ன பேசினாய் என்று கேட்டுக் கேட்டுக் அடித்தார்கள். மது

www.tamilarangam.net

அருந்துவாயா? புகைப் பிடிப்பாயா? என்று எல்லாம் கேட்டார்கள். எத்தனை பெண்களுடன் உடலுறவு செய்திருக்கிறாய்? எத்தனை காதலிகள் உண்டு? உனது காதலியுடன் உடலுறவு கொண்டு விட்டாயா? காதலியின் பெயர் என்ன? காதலியின் முகவரி என்ன? காதலி அழகா? வெள்ளையா? கறுப்பா? என்றெல்லாம் விசாரித்தார்கள். இவ்வாறான சுமார் மூன்று மணி நேரம் விசாரணை நடை பெற்றது. முட்டுக்காலில் எல்லாம் அடித்ததினால் என்னால் நடக்க முடியவில்லை. ஒரு வாறாக எனது இடத்திற்கு வந்து சேர்ந்தேன்.

இந்த விசாரணை விபரம் மேல் இடத்திற்கு போய் வந்ததும் மீண்டும் ஒரு விசாரணை இருக்கும் என கூறினார்கள். முதல் விசாரணை நடை பெற்று பதினைந்து நாட்களின் பின் மறு விசாரணைக்காக அழைக்கப்பட்டேன். கண்கள் கட்டப்பட்டதும் வேறு ஒரு புலி விசாரணை செய்தார். நீ பெரிய சுத்தல்காரன் என அறிக்கையில் கூறப் பட்டுள்ளது. இன்று சாகப்போகிறாய். நான் கேட்பவற்றை எல்லாம் ஒத்துக் கொண்டால் தப்புவாய் என அடித்துக் கொண்டே விசாரணையை ஆரம்பித்தார். நிமிடத்திற்கு ஒரு அடி விழுந்தது. பின் பக்கமாகவும் வேறு யாரோ அடித்தார்கள். எனது நினைவு மயங்கும் வரை அடித்தார்கள். பின்னர் கண் கட்டப்பட்ட நிலையில் ஒருவர் தடி ஒன்றை நீட்டி அதைப்பிடித்துக் கொண்டு வரும்படி என்னை அழைத்துச் சென்றார். கண் கட்டப்பட்டு இருந்தால் எங்கு கொண்டு செல்லப்படுகிறேன் என்பது தெரியவில்லை.சுமார் ஐநூறு யார் நடந்திருப்பேன். கண் கட்டை நீக்கினார்கள் புதிதாக அமைக்கப்பட்டிருந்த ஒரு கூடத்தினுள் இருந்தேன். அங்கு கண் கட்டப்பட்ட நிலையில் ஒரு கைதி கிடத்தப்பட்டிருந்தார். அவரின் மீது நாலு புலிகள் சேர்ந்து ஒரு பெரிய இரும்பு றோதையை உருட்டினார்கள்.அதன் கனத்தைப்பார்க்கும் போது ஐநூறு கிலோவுக்கும் மேல் இருக்கும் போல் தோன்றியது. அக்கைதி உருளையை மேலே உருட்டும் போது முதலில் பெரிய சத்தமாக அலறினார் பின்னர் சத்தமே வரவில்லை. மூர்ச்சையாகி விட்டார். அவருக்கு தண்ணீர் தெளிக்கும்படி அச்சித்திரவதைக் கூடப் பொறுப்பாளர் காந்தி என்பவர் கூறினார். மூர்ச்சை தெளிவிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. சிறிது நேரத்தில் அக்கைதி வெளியே அனுப்பப் பட்டார்.

ஒரு கைதி கதிரை ஒன்றுடன் சேர்த்து விலங்கிடப்பட்டிருந்தார். அவரின் கை விரல் நகங்களுக்குள் நீளமான ஊசி ஏற்றப்பட்டது. ஒவ்வொரு விரலாக குற்றினார்கள். ஒவ்வொரு விரலுக்குள்ளும் ஊசி செருகும் போது அவரிடம் கேள்விகள் கேட்கப்பட்டன. பின்னர் நகத்தைப் பிடுங்க எத்தனித்தார்கள். அதற்குள் கேட்டதை எல்லாம் கைதி அவர்கள் சொன்னபடி ஒத்துக் கொண்டார். அவருக்கு சித்திரவதை முடிந்தது.

காஞ்சோண்டி எனப்படும் ஒருவகை சுணை இலை அப்பகுதிக் காட்டுக்குள் இருந்து கொண்டுவரப்பட்டு கைதிகளின் உடல் எங்கும் பூசப்பட்டது. நிர்வாணமாக்கி இந்த இலையினால் தடவினார்கள். மயிர்க்கொட்டி பட்டால் தடிப்பது போல் தடித்து உடல் முழுவதும் சொறி ஏற்பட்டது. நாலைந்து நாட்களுக்கு உடல் அரிப்பு ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். இச்சித்திரவதை அங்குள்ள பல கைதிகளுக்கு செய்யப்பட்டு விசாரணை மேற்க் கொள்ளப்பட்டது. வேறொரு கைதி கால்களும் கைகளும் கதிரைகளுடன் பிணைக்கப்பட்ட நிலையில் இருந்தார். அருகில் ஒரு சூளையில் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. அதில் இரும்புக் கம்பிகள் காச்சப்பட்டிருந்தன. மேற்படி கைதியிடம் விளக்கம் நடந்து கொண்டுடிருந்தது. காச்சப்பட்டு தணல் போல் இருந்த கம்பியினால் கைதியின் குதிக்காலில் சூடு போட்டார்கள். சித்திரவதைக் கூடல் கூச்சலால் அதிர்ந்தது. பின்னர் ஏதோ கேட்டார்கள். மீண்டும் வேறொரு கம்பியை எடுத்து துடையில் சுட்டார்கள் முதுகிலும் சுட்டார்கள். கைதி உணர்விழந்து விட்டார்.

முள்ளுக் கம்பினால் செய்யப்பட்ட சவுக்குப் போன்ற ஆயுதத்தால் ஒரு கைதியை இரு புலிகள் மாறி மாறி அடித்தார்கள். அவர் உடல் எங்கும் காயப்பட்டு இரத்தம் வடிந்தது. காயத்துக்குள் உப்புத்தூளும், மிளகாய்த்தூளும் தடவப்பட்டது. விசாரணை தொடர்ந்தது. அவர்கள் கேட்டப்படி எல்லாம் கைதி சொன்னார் புலிகள் திருப்தி பட்டார்கள்.

ஒரு கைதிக்கு இருகால்களும் தனித்தனியே இழுத்துக் கட்டப்பட்டது. இருகைகளும் உயர்த்திக் கட்டப்பட்டது. கைதியின் இரு காதுகளிலும் கிளிப் (இடுக்கி) இணைக்கப்பட்டது. அதில் மின்சாரம் பாச்சப்பட்டது. கைதி புலிகளுடன் ஒத்துப் போகவில்லை.பின்னர் நிர்வாணமாக்கப்பட்டார். ஆணுறுப்பில் கிளிப் பொறுத்தப் பட்டு மின்சாரம் பாச்சப்பட்டது. கைதிபட்ட வேதனை சொல்ல முடியாது புலிகள் கேட்ட கேள்விகளுக்கு அவர் ஆம் ஆம் என கூக்குரலிட்டார்.

நீ இந்திய ஆமிக்கு பத்து பெண்களை ஏற்பாடு செய்து கொடுத்தாய் அல்லவா என்றதும் கைதி ஆம் ஆம் என கத்தினார். அடுத்த கேள்விக்கு கைதி மௌனம் சாதிததும் மீண்டும் ஆணுறுப்பில் மின்சாரம் பாச்சப்பட்டது. நீ ஐந்து பெண்களை கற்பழித்தாய் அல்லவா என்றதும் கைதி ஆம் ஆம் என அலறினார். புலிகள் திருப்திபட்டு கட்டுக்களை விலக்கினார்கள். கைதி பிணம் போல் சாய்ந்தார்.

என்னை அழைத்து விசாரித்தார்கள். நீ ஊரில் நாலு புலிகளை இந்திய இராணுவத்திற்கு காட்டி கொடுதாய் அல்லவா என்றார்கள். நான் இல்லை என்றேன் உடனே எனது உடல்எல்லாம் காஞ்சோண்டி பூசப்பட்டது. உடல் எல்லஎம் அரிப்பு அரிதது மீண்டும் அதையே கேட்டார்கள். நான் மறுத்தேன். முள்ளுக் கம்பி சவுக்கால் அடித்தார்கள். காயத்தில் மிளகாய்த் தூள் போட்டார்கள். உடல் எல்லாம் தடித்து விட்டிருந்தது. அத்துடன் காயத்திலிருந்து இரத்தமும் வடிந்து கொண்டிருந்தது. மிளகாய்த் தூளைப்போட்டதும் என்னால் தாங்க முடியவில்லை. அம்மா அம்மா என அலறினேன். "அம்மாவை இந்தியன் ஆமிக்கு குடன்ரா" எனக் காந்தி என்ற புலி கூறிச் சிரித்தார். உனது ஊரில் நாலு புலிகளை இந்தியன் ஆமிக்கு காட்டிக் கொடுத்தாய் இதற்கு எம்மிடம் ஆதாரம் இருக்கிறது. நீ மறுத்தால் அடுத்து உனக்கு கரண்ட் பிடிக்கப்படும் என மின்சாரம் பாச்சும் இடத்திற்கு கொண்டு போய் சங்கிலியால் பிணைத்தார்கள். நான் அலறினேன் புலிகள் சிரித்தார்கள். எந்த ஒரு இயக்கத்திலும் சேராத தமிழ் மகனுக்கு புலிகள் செய்யும் கொடுமையை எண்ணிக்கலங்கினேன். இப்படிப்பட்ட கொடியவர்களின் கைகளில் தமிழீழம் போனால் மக்கள் என்ன ஆவார்கள். இந்த நேரத்தில் என் மனதில் ஓர் வைராக்கியம் உண்டானது. என்ன சித்திரவதை

www.tamilarangam.net

செய்தாலும் நான் உண்மையைத் தவிர வேறு எதுவும் சொல்வது இல்லை என முடிவு எடுத்தேன். சித்திரவதை கூடப்பொறுப்பாளர் அதாவது இறைச்சிக்கடை பொறுப்பாளர் காந்தி எனது பைலை படித்துப் பார்த்தான் என்ன நினைத்தானோ தெரியாது எனது விலங்குகளை அவிழ்ந்து என்னை பங்கருக்குள் போடும்படி பணித்தான். பங்கருக்குள் போடப்பட்டேன். பங்கர் ஒரே இருட்டாக இருந்தது. அது மூடு பங்கர் பகல், இரவு எதுவும் தெரியவில்லை. எத்தனை நாள் பங்கருக்குள் இருந்தேனோ தெரியாது. பங்கருக்குள் இருந்த போது கண் கட்டப்பட்டு இருந்தேன். 2 நேரம் உணவு தரப்பட்டது. இரண்டு தடவை மலம் கழிக்க அனுமதிக்கப்பட்டேன். நாலு தடவை நீர் தந்தார்கள் மூன்று நாட்கள் அந்த பங்கருக்குள் இருந்ததாக பின்னர் அறிந்தேன்.

மீண்டும் முகாமில் கொண்டு வந்த விடப்பட்டேன். இறைச்சிக்கடை என்று செல்லமாக அழைக்கப்படும் சித்திரவதைக்கூடம் முகாமில் இருந்து சுமார் ஐநூறுயார் தூரத்தில் காட்டுக்குள் இருந்தது. சித்திரவதை செய்யபடும் கைதிகளின் கூச்சல் ஏனைய கைதிகளுக்கு கேட்க முடியாத தூரத்தில் இறைச்சிக்கடை இருந்தது.

கைதிகள் எல்லோரையும் தனித் தனியாக பக்கவாட்டிலும் நேராகவும் புகைப்படம் எடுத்தார்கள். பெயர் என்ன, இயக்கம், கைதி இலக்கம் என்பவற்றை அட்டையில் எழுதி கழுத்தில் தொங்கவிட்டு புகைப்படம் எடுத்தார்கள். அதே நிலையில் வீடியோ படமும் எடுத்தார்கள். ஒரு கைதியை வீடியோ படம் எடுக்கும் போதுஅவர் பெயர்,இயக்கம், தீய பழக்கங்கள் என் எல்லாம் ஒலிப்பதிவு செய்து கொண்டார்கள்.

விசாரணையின் பின் பல கைதிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதாக அறிந்தேன். முதன் முதலாக மரண தண்டனை அளிக்கப்பட்ட கைதி E.P.R.L.F ஐச் சேர்ந்த டக்ளஸ் எனும் நபர் ஆவார். இரண்டாவதாக மன்னார் பகுதியில் இயங்கிய ரெலோ இயக்க உறுப்பினர் பாலி என்பவரும் மரண தண்டனை விதிக்கப்பட்டார்கள். மரண தண்டனை கைதிகளுக்கு முன் நிறைவேற்றிப்படுவது இல்லை. வேறு இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டு சயனட் பூசிய கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டார்கள்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் தனியாக பிரிக்கப்பட்டு அவர்களின் கால் விலங்குகளுக்கு மீண்டும் மின்ஒட்டு மூலம் ஒட்டப்பட்டன. கைகளுக்கும் விலங்குகள் போடப்பட்டு வாகனங்களில் அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

வேறு சில கைதிகளுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு அவர்களுக்கும் மேற் சொன்ன விதம் விலங்கிடப்பட்டு வேறு இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டார்கள்.

சில கைதிகளுக்கு ஒரு வருட சிறைத்தண்டனையும் ஆறு மாத சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. ஆறு மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் ஒரு சிலர் மட்டும் விடுதலை ஆனார்கள். பலர் இலங்கை இராணுவத்துடன் புலிகள் புரியும் அர்த்தமற்ற யுத்தத்திற்கு காப்பரண்கள் அமைக்க அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு இராணுவத்தினரின் துப்பாக்கி வேட்டுக்கும் ஷெல் அடிக்கும் பலி ஆனார்கள். தமிழருக்கு புலிகள் தீர்ப்பளிக்க இராணுவத்தினர் தண்டனை வழங்குவதும் தமிழீழ விடுதலைக்கு மிக மிக அவசியமானதே. ஆறு மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு கோப்பாய் முகாம் ஒன்றுக்கு மாற்றப்பட்டேன். அங்கு சுத்திகரிப்பு வேலைகள் செய்ய பணிக்கப்பட்டேன். ஒரு நாள் இலங்கை ஆகாயப்படையினர் நாம் இருந்த முகாமுக்கு விமானக் குண்டு போட்டார்கள். புலிகள் பாதுகாப்பான இடத்தில் பதுங்கி விட்டார்கள். அடைத்து வைத்திருந்த கைதிகளில் பலர் கொல்லப்பட்டார்கள். இச்சந்தர்பத்தை பயன் படுத்தி நான் சிறையில் இருந்து தப்பி வெளியே வந்தேன். வெளியே வந்த பின் தான் தெரிந்தது தமிழீழமே புலிகளின் சிறைக் கூடமாக மாறியிருந்தது. தமிழீழத்தில் உள்ள மக்கள் எல்லோரும் புலிகளின் கைதிகள் என்றும் உணர்ந்தேன்.

வஞ்சகப் புலிகளினால் தமிழ்க் கைதிகள் படும் இன்னல்களில் எனக்குத் தெரிந்தவற்றை மட்டும் இங்கு எழுதி உள்ளேன். இதைவிட அட்டூழியங்களும் சித்திரவதைகளும் புலிகளினால் வேறு வேறு இடங்களில் செய்யப்பட்டது. உலகிலேயே மனித உரிமையை சிறிதேனும் அறியாத ஓர் அமைப்பு என்றால் அது புலிகள் இயக்கம் தான் என்பதை உலகமே அறிய வேண்டும். சர்வதேச மன்னிப்புச்சபையும் மனித உரிமைக்காக குரல் கொடுக்கும் அனைத்து உலக அமைப்புக்களும் இம்மனித உரிமை மீறல்களைக் கண்டிக்க வேண்டும். அத்துடன் கொலைகாரப் புலிகளினது கொடிய சிறையில் வாழும் தமிழ் மக்களை விடுவிக்க அனைத்து முயற்சிகளையும் செய்ய வேண்டும்.

## புதிய வரலாற்றை.....

ம் பக்கத் தொடர்ச்சி)

இறுதியில் அவர்களுக்கு எதுவுமே அர்த்தமற்றுப் போய்விடும்.

முழுப் போராட்டத்தின் சீரழிவைப் பற்றிக் கவனிக்காமல் வெவ்வேறு அமைப்புகளின் உறுப்பினர்களின் இயல்புகள் பற்றி ஆராய்வது பயனற்றது என்பது உண்மை. ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் ஒவ்வொரு இயக்கத்திலும் ஆரோக்கியமற்ற தன்மைகள் காணப்பட்டன. இந்த செயற்பாட்டில், ஆரோக்கியமற்ற தன்மைகள் குறைக்கப்படுவதற்கு பதிலாக, ஆரோக்கியமான தன்மைகளே குறைக்கப்பட்டன. இதில் முந்தியது மேலாதிக்கமடைந்த வரலாற்றின் பாதையை நிர்ணயித்தது. நாங்கள் எஞ்சியுள்ள ஆரோக்கியமான இயல்புகளை வைத்து புதி வரலாற்றை உருவாக்க வேண்டி தேவை உண்டு. இந்த உறுப்பினர்க இயக்கங்களில் சேர்ந்தது முதல் பெருமளவிலானோர் அர படைகளினாலும் இயக்கங்களினாலு கொல்லப்பட்டும் சித்திரவ செய்யப்பட்டும் இருந்ததைப் பார்க்கு போது அது எமது சமூகத்தி ஏற்படுத்திய தாக்கத்தை காணக்கூடியதாக உள்ளது.

www.tamilarangam.net

நூல் அறிமுகம்

# கட்டிடக் காட்டுக்குள்




கவிதைகள்: செல்வம்

## நேற்றுவரை

நீறு பூத்த நெருப்பில் பூ மலரும்
கூறு கொண்ட கைகள்
ஒன்றாகி கருவி கொள்ளும்
இப்படியே கனவு கண்டு
கனவு கண்டு.............

சுளிபுரத்து சுடுமணல் தொடங்கி
வீர வன்னி வீதி மட்டும்.....
நேற்றுவரை .............
மண்ணையும் சுகந்திரத்தையும்
எதிரி பறித்தான்
மனித நேயத்தை அன்பு செய்தலை
யார் பறித்தார் ?
வெட்கப்படுவோம் !

துப்பாக்கி வழிபாடும்
ஆளுமை நினைப்புக்களும்
இப்படியே தொடர்ந்தால்.........
துர் அதிர்ஸ்டம் பிடித்த இனமே
ஒட்டு மொத்த இனத்தையே ,
எதிரி ஏதாவது கம்பத்தில் தூக்கி
"தற்கொலை செய்தார்கள்"
எழுதி வைப்பான்.

தமிழ் முரசு/ தை 1986

www.tamilarangam.net

# வெளியிலே போனவர்கள்

கடல்களுக்கப்பால்
இன்னும்
தேசங்கள் உள்ளனவோ
தேடுகிறார்கள் எங்கள்
மனிதர்கள் !

வெளியிலே போகின்றோம்
எனச் சொல்லி
வெளியிலே போனவர்கள்
பபிலோன் நதியோரத்திலிருந்து
சீயோனை நினைத்தழுத
யூதரானோம்.

நாங்கள் நல்ல சுகம்
உங்கள் சுகம் எப்படி ?
பொய் எழுதி, பொய் எழுதி
பேனாவே நகைக்கிறது.

பனிசுட்டு உடல்வாடி
* "பத்திரோன்" முகம்பட்டு
மனம் வாடி
இயந்திரங்கள் ஆனோம்.

அழிந்தவர்கள் அல்ல
வெள்ளியும் நிலவும் போல
சிலபோது மறைந்தவர்கள்
நல்ல மரணம் வரும் நாள்வரை
ஊரோடும் உறவோடும்
கிளைவிட்டு வேரோடி
செழிக்கும் மரமாவோம்
இனி அங்கு.

மாசி/1987

* முதலாளி

# நந்தவனத்திலோர் ஆண்டி

மூன்று தமிழ் தோன்றியதும்
எம்மிடமோ- நாங்கள்
மூத்தகுடிப் பரம்பரையின்
புத்திரரோ ?

இராமனும் பரதனும் அடிபடும்
இந்த இராமாயணம்
உலகம் நம்மாலே கற்கும்

இரும்பாலே செய்தாரோ மனதை
இப்படிக் கொடுமைகள் ஆக
நான் பெரிது, நீ பெரிது
என் சாதி உன் சாதி
என் இயக்கம் உன் இயக்கம்
"நாங்கள்"
நந்தவனத்திலோர் ஆண்டி
கூத்தாடிக் கூத்தாடி
போட்டுடைத்தோமடி !

குந்தியிருக்கவோர் நிலம்
குறித்து காட்டவோர் பூமி
அள்ளியணைக்கும் உறவு
இழந்தவர் இங்கே
காற்சட்டை மேற்சட்டை போட்டு
நிர்வாணமாய் திரிகின்றோம்
அந்நியரின் பூமியிலே !

தமிழ் முரசு/ சித்திரை 1987

வெளியீடு:
ஈழம் கலைகள் சமூகவிஞ்ஞானக் கழகம்

"ASSEA"
3, Alle Paul Leautaud,
95200 Sarcelles,
France.

www.tamilarangam.net

கொஞ்ச நேரக் கனவு போல்
கலைந்தது மாலை.
இனி நீல வான் நிறம்மாறி
நிலவேந்தும் வேளை.

எல்லைகளில்லா வான வீதிதனில்
அகதியாவதில்லை என்றும்
வெள்ளி நிலவு.

பார்த்தபடி கொஞ்ச நேரம்
மனம் கரைக்க விருப்பந்தான்.
கூடவே வீரமாகாளி உன்னினைவும்
கால்களின்றியே துரத்தி வரும்.

இருந்தாலும்
தனிமை துரத்திவர
தனியாக நடந்து வந்து
விண்ணில் மனப்புறாவை
பறக்க விடுதல்
இனியுமிங்கு சாத்தியமோ?
வீரமாகாளி.

அச்சம் விடுத்து
அகதி நடக்கும் நாட்கள்
இம்மண்ணில் இனி வருமா?
உண்மைதனை நீயுரைப்பாய்.

மரிக்கின்ற வரைதனில்
உயிர்த்திருக்கும்
அவசரப் பொழுதுகளில்

கனவுகளின் கலைவு பற்றி
யார்தான் அலட்டிக் கொள்வார்.

சமயங்களில்
உணர்வுகள் நசிந்து
உயிரழியும் பொழுதுகளிலும்
உயிர்த்திருக்கும் அவசரமே
ஒவ்வொரு கணத்தினையும்
ஆளுமிங்கு.

என்ன செய்வது
இன்னமும் இதன் பெயர்
வாழ்க்கைதான்.

எனினும்
உதைக்கும் அரக்கனின்
முகத்தைப் பார்க்கும்
அவகாசமின்றி
ஒய்வின்றி நசியும்
அடிமை ஒவ்வொருத்தியின்
பூட்டிய மனந்தனில்
இன்னமும் வீற்றிருக்கும்
வீரமாகாளி நின்னை
நம்பிக்கை கொண்டு
என் மனம் வணங்கும்.

வீதிகளிலிறங்குகையில்
விபத்துகளிலிருந்து காத்தும்
நண்பனின் துவக்கிற்கஞ்சி
எதிரியின் குகைக்கோடும்

துரதிஸ்டம் தன்னை
அதிர்ஸ்டத்தால் தவிர்த்தும்
இன்று
வீரமாகாளி உன் சிரிப்பான
பொன்னந்தி மாலையைப்
பாதியில் விழுங்கிடும்
இலையுதிர் கால இரவினிலே
நிம்மதி தன்னை
அச்சம் விழுங்க
"நாசி"க் கொலைக் கரத்திற்கஞ்சியும்
இனவெறித் தீ யிடமிருந்து தப்பவும்
வீரமாகாளி உனை நினைக்கும்
எனதுயிரை
ஒரு கிழவனாகிச் சாவதற்காய்
ஒரு பலகை வீட்டினுள்
ஒளித்து வைத்தேன்.

விதிமகன்
வாழ்வின் கனவில் அக்கறையின்றி
துயரக் கண்ணிவெடிகள்
புதைத்திருக்கும் காலவீதிதனில்
கால் பதித்தலே வாழ்வாகும்.

விதுரன்.



www.tamilarangam.net

# INTERNATIONAL MARXIST REVIEW

TODAY, when Marxist theory is under strong attack in the English-speaking world and beyond, *International Marxist Review* continues to fight in the "battle of ideas" to arm and renew revolutionary socialism. What happened in Eastern Europe, is socialism a viable perspective worldwide, the importance of the feminist struggle; all these questions of importance to socialists are taken up in our pages.




**Subscription rates: Britain and Europe £10/120FF/$17;**
**USA & elsewhere (airmail) $20; all countries (surface) £10/120FF/$17.**
**Please make cheques payable to PEC. Bank transfers to PEC, BNP Robespierre Acct 120179/90. Postal transfers to PEC CCP no 2 322 42 T Paris.**
**Please mark clearly "IMR".**
**For subscriptions and single copies please write to:**
**IMR, 2 rue Richard Lenoir, 93108 Montreuil, France.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்